இன்றைய காலத்தில்
தீய தாக்கங்களிலிருந்து
நம்மை எவ்வாறு பாதுகாத்துக்
கொள்வது?
பக்கம் 3

ஒரு கிறித்தவரின் மூன்று
வினாக்களும் அவற்றிற்கான
விடைகளும் (தொடர்-4)
பக்கம் 10

துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல்
இறையிருப்பிற்கான
சிறந்த சான்று
(தொடர்ச்சி)
பக்கம் 15

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)
அவர்களின் வாழ்க்கை –
இறைவன் பக்கம் அழைத்தல்
என்பதன் ஒளியில்
(தொடர்ச்சி)
பக்கம் 18



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | October 2024 | Vol. 3 - Issue No. 11


Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

وَاَقِمِ الصَّلٰوةَ طَرَفَىِ النَّهَارِ وَزُلَفًا مِّنَ
الَّيۡلِ‌ؕ اِنَّ الۡحَسَنٰتِ يُذۡهِبۡنَ السَّيِّاٰتِ‌ؕ
ذٰ لِكَ ذِكۡرٰى لِلذّٰكِرِيۡنَ‌ۚ

மேலும் (செவியேற்பவரே!) நீர் பகலின் இரு கோடிகளிலும், இரவின் (ஒரு) பகுதியிலும் (சிறந்த முறையில்) தொழுகையினை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக நற்செயல்கள், தீய செயல்களை அகற்றி விடுகின்றன. (அல்லாஹ்வை) நினைவு கூர்பவர்களுக்கு இது ஓர் அறிவுரையாகும். (11:115)



# ஹதீஸ்

عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا ، أَنَّهَا قَالَتْ :
سُئِلَ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَيُّ الْأَعْمَالِ
أَحَبُّ إِلَى اللَّهِ ؟ قَالَ : أَدْوَمُهَا ، وَإِنْ قَلَّ ،
وَقَالَ : اكْلَفُوا مِنَ الْأَعْمَالِ مَا تُطِيقُونَ .

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ‘‘அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய செயல்கள் எவை?’’ என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘மிகவும் தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற நற்செயலே அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானது. அது அளவில் சிறிதாக இருப்பினும் சரியே. மேலும் நற்செயல்கள் புரிவதில் இயன்ற வரை அதன் எல்லையைத் தொட முயலுங்கள்’’ என்றும் கூறினார்கள். (புகாரி ஹதீஸ் எண். 6465)



# இன்றைய காலத்தின் தீய தாக்கங்களிலிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

ஜனாப் ரஃபீக் அஹ்மத் ஹயாத் சாஹிப், அமீர், UK

தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மது, காதியான்

இன்றைய காலத்தில் மனிதகுலம் எல்லாத் துறைகளிலும் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. நவீன பயண வசதிகள் மூலமாகவும் மேலும் மின்னணு மற்றும் டிஜிட்டல் தொடர்பு டிவி, ரேடியோ, இண்டர்நெட் மற்றும் இப்போது AI technology-ல் வந்துள்ள முன்னேற்றங்களினால் தூரங்கள் குறைந்துள்ளன. மனிதகுலத்தின் வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் உலகம் இணைக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதுமாக இணைக்கப்பட்டிருந்தாலும் மனிதர்களுக்கிடையே உள்ள தூரம் அதிகமாகி விட்டது. குறிப்பாக படைத்தவனிமிருந்தும் மனிதகுலம் தூரமாகி விட்டன. இந்த தொழில்நுட்ப வசதிகள் பல சமுதாய தீமைகளை அதிகமாக்கி விட்டது. உதாரணமாக அரசியல், பொருளாதார ஊழல், ஒழுக்கக்கேடு மற்றும் சமூக அநீதிகள் ஆகும். இந்த சீர்கேடுகள் நிகழ்காலத்தை மட்டும் பாதிக்காது. மாறாக நமது வருங்காலத்தையும் இவை பாதிக்கும். இன்றைய உலகில் மிக முக்கியமான பிரச்சனை என்னவென்றால் அது அமைதியின்மை ஆகும்.

மனிதன் மகிழ்ச்சியாக மற்றும் நிம்மதியாக இல்லை. அமைதியின்மை, பயம், எதிர்காலத்தின் மீது நம்பிக்கை -யின்மை மற்றும் பாராம்பரியத்தின் மீதான அதிருப்தி ஆகியவை அதிகரித்து வருகின்றன.

முஸ்லிம்களாகிய நமக்கு இத்தகைய காலத்தைப் பற்றிய எச்சரிக்கை இருக்கின்றது. அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான். (அழிவு) காலத்தின் மேல் ஆணையாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்து உண்மையைக் கூறி பொறுமையுடன் செயலாற்றுபவர்களைத் தவிர (அவர்கள் என்றும் இழப்பிற்காளாக மாட்டார்கள்).

இந்த திருக்குர்ஆனின் வசனங்கள் நமக்குக் கூறுவது என்னவென்றால் உண்மையான அமைதி மற்றும் மகிழ்ச்சி எவர்களுக்கு வழங்கப்படும் என்றால் எவர்கள் நற்செயல்கள் செய்து இறைவனோடு தொடர்பை ஏற்படுத்துவார்களோ அவர்களுக்கே ஆகும். படைத்தவனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகள் மற்றும் படைப்பினத்திற்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளின் முக்கியத்துவத்தை அல்லாஹ் திருக்குர்ஆனில் அதிகமாக வலியுறுத்துகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் முக்கியமான கட்டளைகள் இரண்டாகும். அதாவது: (1) இறைவனின் ஏகத்துவம் அவனது அன்பு மற்றும் எல்லா வல்லமையுடைய படைப்பாளனுக்குக் கட்டுபடுவது ஆகும். (2) தனது சகோதரர்கள் மற்றும் மனித குலத்திற்கிடையே அன்பைப் போற்றுவது ஆகும்.

எவ்வாறாயினும், வாழ்க்கையில் நமது நோக்கம் லாபம், இன்பம் மற்றும் பதவியைப் பெறுவது என இருக்கும் போது, அது எல்லாம் வல்ல அல்லாஹ் நிர்ணயித்த இலக்குகளில் கவனம் செலுத்துவதற்குக் குறைவான நேரம், ஆற்றல் மற்றும் திறனை விட்டுச் செல்கிறது. நமது சமூகம் தன்னலம் என்ற கலாச்சாரத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. உளவியல் அறிவியலில் வெளியிடப்பட்ட சமீபத்திய ஆய்வு, உலகெங்கிலும் உள்ள மக்கள் காலப்போக்கில் மிகவும் தன்னலம் சார்ந்தவர்களாக மாறுகிறார்கள் என்று கூறுகிறது, சமூக ஊடகங்கள், நம்மை மற்றவர்களுடன் இணைத்தாலும், அது ஒருவரை தன்னலமிக்கவராக தனது இருப்பைத் தெரியப்படுத்துபவராக மாற்றவல்லது. மேலும் சமூக ஊடகத்தின் பெரும்பான்மை எல்லாம் தன்னைப் பற்றியது என்பதாகும்.

தனிமனித வாதம் 'எனக்கு முதலில்' என்ற மனப்பான்மையைத் தூண்டுகிறது, இது குறைவான அதிர்ஷ்டம் உள்ளவர்களின் போராட்டங்களை மக்கள் அடையாளம் கண்டு கொள்வதிலிருந்தும் அல்லது கூட்டு நன்மைக்காக சுய தியாகத்தைத் தழுவுவதையும் கடினமாக்குகிறது. மற்றொரு கவலை, ஒத்துழைப்பு இல்லாதது ஆகும். இதை நாம் ஏற்கனவே நமது துருவப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பில் பார்த்து வருகிறோம், இதில் எதிரெதிர் கருத்துகளைக் கொண்ட மக்களும் கட்சிகளும் ஒன்றிணைந்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. நாங்கள் மூன்றாம் உலகப் போரை நோக்கி முதலில் செல்கிறோம். இந்த விஷயங்களே போருக்கு முந்தைய நிலைக்கு நம்மை இட்டுச் செல்கின்றன என பலர் நம்புகின்றார்கள்.

தனி மனித வாதம் மேலும் பல காரணிகளால் தூண்டப்படுகிறது. அதில் முக்கியமான மற்றும் சமூகத்தை

சீரழிக்கும் ஒன்று உலக நோக்கமாகும். பொருள் மிகுதியின் விளைவைப் பற்றி பலர் அறியாமல் இருக்கின்றார்கள். இது சமூகத் தொடர்பு இல்லாமை, அதிக சுற்றுச்சூழல் கழிவு மற்றும் மோசமான கல்வி முடிவுகள் போன்ற குறைந்த அளவிலான நல்வாழ்வுடன் தொடர்புடையது. இது அதிக செலவு சிக்கல்கள் மற்றும் கடனுடன் தொடர்புடையது.

பேய்லர் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் எந்த நபர்கள் அதிக அளவில் உலக ஆசைகளை கொண்டுள்ளார்களோ அவர்கள் வாழ்வில் குறைவான நிம்மதியை அடைகின்றார்கள். மேலும், மனச்சோர்வு அடைகின்றார்கள். இந்த ஆய்வில் இதுவும் கூறப்பட்டுள்ளது. அதாவது 2012-ஆம் ஆண்டிலிருந்து எந்த சிறுவர்கள் சமூக வலைதளங்களை அடிக்கடி உபயோகிக்கின்றார்களோ அவர்களுக்கு மனச்சோர்வு அதிகமடைந்து வருகின்றது. அது மேலும் அதிகமடைந்து நட்பு வட்டம், குடும்ப உறவு மற்றும் தினசரி பழக்க வழக்கத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இது எவ்வாறு ஏற்படுகின்றது என்றால் Snapchat, Instagram and Facebook போன்ற சமூக வலைதளங்களை அதிகமாக பயன்படுத்துவதன் விளைவாக அடைய முடியாத, உலக ஆசைகள் தூண்டப்படுகின்றன. இவை மக்களிடையே எப்படிப்பட்ட அழகு மற்றும் பொருளியல் ஆசைகளை விதைக்கின்றன என்றால் அது நிஜ வாழ்கையில் சாத்தியமற்றதாகும்.



பல இளைஞர்கள் சமூக ஊடகங்களின் நன்மையான பயன்பாடுகளைப் பற்றி பேசுகின்றார்கள். ஆம், எதிர்மறையான சமூகங்கள் ஒரே மாதிரியான கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள பரஸ்பர இடத்தைக் கண்டறியும் சில நிகழ்வுகள் உள்ளன. சமீபத்தில் காஸா மற்றும் உக்ரைன் மோதல்கள் மூலம் இதைப் பார்த்தோம், அப்பாவி பொதுமக்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்களுக்கு எதிராக தங்களது கருத்தைப் பதிவு செய்ய உலகம் இந்தத் தளங்களைப் பயன்படுத்தியது. இருப்பினும், சமூக ஊடக தளங்கள் மிகவும் பரந்ததாக இருப்பதால், குழந்தைகள் தங்கள் புரிதலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். இது அவர்களுக்கு தவறான தகவல்களை சென்றடையச் செய்யும். இன்னும் சொல்லப்போனால் தீவிரவாத கருத்துகளும் அவர்களை சென்றடையும்.

பில்கேட்ஸ் தொழில்நுட்ப உலகில் முன்னணியில் இருப்பவர். அவர் கூறுகின்றார்: நான் எனது வீட்டில் குழந்தைகள் எவ்வளவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பதை கட்டுப்படுத்துகின்றேன். 2007-ஆம் ஆண்டு தன் மகள் ஒரு வீடியோ கேமில் அதிக ஆர்வம் காட்டுவதைக் கண்டு அவர் இந்தக் கட்டுப்பாட்டை விதிக்க ஆரம்பித்தார். அவர் தன் குழந்தைகள் 14-வது வயதை அடையும் வரை மொபைல் போனை அவர்களுக்கு கொடுக்கவில்லை.

மேலும் Snapchat-இன் CEO Evan Spiegel இதை உறுதிப்படுத்துகின்றார். அதாவது Financial Times-க்கு அவர் ஒரு நேர்காணல் அளித்தார். அதில் அவரும் அவரது மனைவியும் அவர்களது குழந்தைகளுக்கு ஒன்றரை மணி நேரம் Screen Time-ஐ வாரத்திற்குக் கொடுக்கின்றனர்.

அதே நேர்காணலில் அவர் பெற்றோர்களுக்கு இவ்வாறு அறிவுரை செய்கின்றார். அதாவது நீங்கள் குழந்தைகளுக்கான அந்தத் திரை நேரத்தைக் குறையுங்கள். அதே போன்று உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் உங்கள் ஃபோன்களில் என்ன செய்கின்றீர்கள் என்பதை விளக்குங்கள். அதனால் அவர்கள் என்ன நடக்கிறது என்று தெரியாமல் உங்களது ஃபோனின் பின்பக்கத்தைப் பார்க்க மாட்டார்கள்.

இந்த இரண்டு உதாரணங்கள் நாம் எவ்வாறு தினமும் சமூக வலைதளங்களில் செலவிடும் நேரத்தை அணுக வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

நமது அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் கொடுக்கும் வழிகாட்டுதல் என்னவென்றால், எவ்வாறு நாம் இன்டர்நெட்டின் அந்தத் தீமைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வது. மேலும் அதன் நன்மைகளில் இருந்து நாம் எவ்வாறு பலன் பெறுவது என்பதாகும். யூ.கே-வில் இருக்கும் வக்ஃபே நவ் பெண்கள் உடனான அந்த சந்திப்பில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உங்களுக்கு சமூக வலைதளத்தின் எதிர்மறை பயன்பாடுகள் தெரியும் என்றால், பிறகு நீங்கள் அதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். இது உங்களது உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம் ஆகும். ஒருவர் எளிதாக உணர்ச்சி வசப்பட முடியும். அவர் ஒரு லிங்கை ஓபன் செய்தால் அதில் சுவாரசியமான விஷயம் வரும். மேலும் அவர் அதன் மூலம் வேறொரு லிங்கை ஓபன் செய்வார். இவ்வாறு அது சென்று கொண்டே இருக்கும். அந்த நபர் அதன் தீய தாக்கத்தை அந்த நேரத்தில் யோசிக்க மாட்டார். எனவே முதல் முறை நீங்கள் சோஷியல் மீடியாவில் ஒரு விஷயத்தை பார்க்கின்றீர்கள். அது உங்களுக்கு தீய தாக்கத்தை தரும் என்றால் நீங்கள் அதிலிருந்து உடனடியாக தவிர்ந்து விடுங்கள். அது மட்டுமல்லாமல் எந்த வலைதளம் உங்களது அறிவை மேம்படுத்துமோ அதை நீங்கள் பாருங்கள். உதாரணமாக, அறிவியல் சம்பந்தமான அல்லது கல்வி சம்பந்தமான விஷயங்களைப் பாருங்கள். டாக்குமெண்டரியைப் பாருங்கள். விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்களின் கட்டுரைகளையும் கருத்துகளையும் நீங்கள் பாருங்கள்.

ஆய்வுகளின் படி குழந்தைகளின் நடத்தையில் மாற்றங்கள் வருவதனால் பல பெற்றோர்களுக்கு தங்களது குழந்தையின் ScreenTime-ஐக் குறைக்குமாறு அறிவுரை கொடுக்கப்பட்டுள்ளது. NSPCC-யின் அறிக்கையின் படி

ஆன்லைன் குற்றங்களில் பாதிக்கப்படும் குழந்தைகளில் நான்கில் ஒரு குழந்தை Primary School குழந்தைகளாவர். 73% குற்றங்கள் Snapchat மற்றும் meta-வின் மூலமாக செய்யப்படுகின்றன. பல ஆய்வுகள் கூறுவது என்னவென்றால் எந்தக் குழந்தைகள் வீடுகளில் நிராகரிக்கபடுகின்றார்களோ அவர்களே ஆன்லைனின் தாக்குதலுக்கு இரையாகின்றனர்.

நான் இதை ஏற்றுக் கொள்கின்றேன். பல பெற்றோர்கள் இப்போது முழு நேர வேலை செய்கின்றனர். மேலும் அலுவலக மற்றும் வீட்டின் பணிகளில் சமநிலையை உருவாக்குவதற்கு போராடுகின்றனர். எவ்வாறிருப்பினும் உங்களது குழந்தை ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வளர்வதற்கு உங்களது நேரத்தில் சில பகுதிகளை உங்களது குழந்தைகளின் பௌதிக, ஆன்மிக மற்றும் கல்வியின் வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும். எனவே உங்களது குழந்தைகள் நல்ல நட்பு வட்டாரத்தில் இருப்பதை உறுதி செய்வதற்கு அவர்களை முறையாக பள்ளிவாசலுக்கு அழைத்து வாருங்கள். School-ல் அவர்களது நடவடிக்கை -களை அறிந்து கொள்ளுங்கள். மேலும் அவர்களுடன் நல்ல நட்பை உருவாக்குங்கள்.

இந்த ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்களது குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிட்ட கவனம் செலுத்தினார்கள். அவர்கள் நோய்வாய்பட்டால் கவனித்துக் கொள்வார்கள். அவர்களுக்கு பல மணி நேரம் ஆறுதல் சொல்வார்கள். அவர்களுக்கு கதை சொல்வார்கள். நல்லொழுக்கத்தைப் போதிப்பார்கள். மேலும் அவர்களுக்காக ஆர்வத்துடன் துஆ செய்வார்கள்.



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த சம்பவம் குழந்தை வளர்ப்பிற்கு மிகச்சிறந்த உதாரணமாகும். ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கள் வீட்டின் மேல்தளத்தில் உள்ள ஓர் அறையில் இருந்தார்கள். அவர்களுடன் ஹஸ்ரத் செய்யது ஃபஸ்ல் ஸாஹிப் என்ற சஹாபியும் இருந்தார்கள். அவர்கள் பாதாம் பருப்புகளை உரித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தின் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களுக்கு அப்போது 4 அல்லது 5 வயது இருக்கும். அவர்கள் அங்கு சென்று அந்த எல்லா பாதாம் பருப்புகளையும் தமது மடியில் எடுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தம் சஹாபியிடம், அவர் நல்ல குழந்தையாவார். அவர் நிறைய எடுக்க மாட்டார். அவர் ஒன்று இரண்டு எடுத்து விட்டு மீதியை வைத்து விடுவார் என்று கூறினார்கள். குழந்தை அதற்கு உடனடியாக உடன்பட்டது.

துஆ சம்பந்தமாக ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சிறுமியாக இருக்கும்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பலமுறை என்னிடம் அவர்களது பணிக்காக துஆ செய்யச் சொல்வார்கள். அந்த நடைமுறை குழந்தைகளிடம் துஆ செய்யும் பழக்கத்தை ஊக்குவிக்கின்றது. மேலும் அவர்களது துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இதிலிருந்து நமக்கு தெரிய வருவது என்னவென்றால், அவர்களது பொறுப்புகள் மற்றும் மும்முரமான வேலைப் பளுவின் மத்தியிலும் அவர்கள் குழந்தை வளர்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அவர்களுக்கான நேரத்தை ஒருபோதும் கொடுக்காமல் இருந்ததில்லை.

எப்போது குழந்தைகள் உதாசீனப்படுத்தப்படுகின் -றார்களோ பிறகு அவர்கள் சமூக மற்றும் நல்லொழுக்க தீமைகளுக்கு ஆளாகின்றனர். நமது சமூகத்தைப் பாதிக்கும் மற்றொரு விஷயம் உடல் தோற்றம் மற்றும் Pornography ஆகும். இது சமூகத்தில் இருக்கும் பல தீமைகளில் ஒன்றாக இருந்தாலும் கூட நமது சமூகத்தின் அடித்தளமாக இருக்கும் குடும்ப சூழலை சிதைக்கின்றது.

இந்தத் தீய அடிமைத்தனம் சமூகத்தில் பரவலாக இருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால், இதை மக்கள் எளிதாக அடைய முடிவதுதான். Times Magazine -ன் ஒரு கட்டுரையின் படி 10 முதல் 17 வயது வரையுள்ள குழந்தைகள் 40% பேருக்கு இந்த online Pornography வெளிப்படுத்தப்படுகின்றது. அதில் பலர் தற்செயலாக அதைப் பார்க்க நேரிடுகிறது. எவ்வாறு இந்தப் படங்கள் அவர்களின் நல்லொழுக்கத்தை மற்றும் மனிதத்தை பாழாக்குகிறது என்றால், அவர்கள் ஆண் மற்றும் பெண்களை ஓர் உடல் ரீதியான பொருளாக மட்டுமே பார்க்கின்றனர்.

ஆய்வுகள் தெரிவிப்பது என்னவென்றால், மீண்டும் மீண்டும் இத்தகைய விஷயங்களைப் பார்ப்பது ஒருவரை அவரது துணையைத் தாண்டிய தொடர்பை நோக்கி அழைத்துச் செல்கிறது, அவரது உறவில் விரிசல் ஏற்படுகின்றது. மேலும் மனஉளைச்சல் ஏற்படுகின்றது. நான் துரதிஷ்டவசமாக இந்தப் பிரச்சனையை நமது ஜமாஅத்திலும் பார்த்துள்ளேன். எனவே நான் நமது இளைய தலைமுறை -யினரிடமும், அவர்களின் பெற்றோர்களிடமும் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இந்தத் தீமைகளிலிருந்து ஏன் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும் என்று உங்களது வீடுகளில் கலந்துரையாடுங்கள். இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

இத்தகைய விஷயங்கள் நமது குழந்தைகளிடமிருந்து அவர்களது குழந்தைத்தனத்தை எடுத்து விடுகின்றன. அவர்களது ஆன்மிக மற்றும் பௌதிக வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன. எனவே அவர்கள் தங்களது வாழ்வில் ஒரு சமநிலையை அடைய மாட்டார்கள். அது அவர்களது குடும்ப மற்றும் திருமண வாழ்க்கைக்கு அவசியமானதாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, நீங்கள் மார்க்கத்தைக் கற்பதற்குத் திருக்குர்ஆனைப் படிக்க வேண்டும். அது நமக்கு இவ்வாறு கற்றுத் தருகின்றது. நமது வாழ்வில் உள்ள ஒவ்வோர் உறவுக்கும் ஒரு மரியாதையும் கண்ணியமும் இருக்கின்றது. இஸ்லாத்தில் திருமணம் என்பது கணவன் மனைவி உறவு வெறும் நட்பிற்காக மட்டும் அல்ல அதேப் போன்று திருமணத்தின் நோக்கம் இனப்பெருக்கம்



மட்டும் அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போது ஒரு ஆண் திருமணம் முடிக்கின்றாரோ அவர் தனது மார்க்கத்தின் பாதியை நிறைவு செய்து விட்டார். இது ஏனென்றால் திருமணம் என்பது அறிவுசார்ந்த, உணர்வுசார்ந்த மற்றும் ஆன்மிகம் சார்ந்த பந்தங்களை நிறைவு செய்வதாகும்.

ஒரு ஜமாஅத்தாக நாம் இந்த விஷயத்தில் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றோம். என்னிடம் பல பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு நல்ல வரன் பார்க்க சொல்கின்றார்கள். நான் அவர்களிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கின்றீர்கள்? என்று கேட்டால். அவர்கள் பெரும்பாலும் மேலோட்டமான விஷயங்களில் கவனம் செலுத்தகின்றார்கள். பையன் இவ்வளவு சம்பாதிக்க வேண்டும். பெண் அழகாக இருக்க வேண்டும். நீல நிற கண்கள் வேண்டும். பையனுக்கு சமையல் தெரிந்திருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கின்றார்கள். இது சமூக வலைதளங்களின் தாக்கமாகும். அது அவர்களிடம் இயல்புக்கு மாற்றமான, யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட எதிர்பார்ப்புகளை விதைக்கின்றது.

சில நேரங்களில் அந்த பையன், பெண்ணிடம் நல்ல நடத்தை, நற்குணம் மற்றும் இறைவனுடனான தொடர்பு பற்றி ஒரு வார்த்தை கூட கேட்பதில்லை. பெற்றோர்கள் இதை அடிக்கடி என்னிடம் கூறுகின்றார்கள். அமீர் சாஹிப், நாங்கள் என்ன செய்வது என் குழந்தை இதைத்தான் எதிர்பார்க்-கின்றான். நான் இன்று இந்த மேடையில் இருந்து பயனடைந்தவனாக நமது இளைய தலைமுறையினருக்கு கூறுகின்றேன். நீங்கள் உங்களது வாழ்க்கைத் துணையை அழகு மற்றும் செல்வத்தை அடிப்படையாக வைத்து மேலோட்டமாக தேர்ந்தெடுக்காதீர்கள். இந்த விஷயங்கள் மாறிக் கொண்டே இருக்கும். எவர் இன்று அழகாக இருக்கின்றாரோ அவர் காலப்போக்கில் வயதாகி விடுவார். மேலும் செல்வம் ஒரு நொடிப்பொழுதில் தொலைந்து விடும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்ததாக கூறுகின்றார்-கள்: ஓர் ஆண், ஒரு பெண்னை திருமணம் செய்வதற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றன. அவை அவரது செல்வம், குடும்ப அந்தஸ்து, அவளது அழகு மற்றும் நன்னடத்தை ஆகும். எவ்வாறிருப்பினும் நீங்கள் நன்னடத்தை உள்ள பெண்ணிற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு நன்னடத்தையுள்ள பெண்ணை அருள்வானாக!

இந்த ஹதீஸ் பொருத்தமான கணவன்மார்களை தேடும் பெண்களுக்கும் பொருந்தும். ஒரு நன்னடத்தையுள்ள துணை உங்களது வீட்டைப் பாதுகாப்பார். உங்களது குழந்தகளை நல்ல ஒழுக்கத்துடன் வளர்ப்பார். அதன் விளைவாக நீங்கள் பௌதிக மற்றும் ஆன்மிக அருள்களைப் பெறுவீர்கள். உங்களது திருமண பந்தத்தை எல்லா விதமான துன்பம் மற்றும் சோதனைகளிலிருந்து பாதுகாப்பது நற்குணம் மற்றும் அல்லாஹ்வுடனான தொடர்பேயாகும்.

இன்றைய முஸ்லிம் இளைய சமுதாயம் எதிர் கொள்ளும் மற்றுமொரு சவால் அவர்களது மனதில் ஏற்படும் மேற்குலகத்தின் தாக்கமாகும். இது ஏன் என்றால் நவீன வாழ்கை என்றழைக்கப்படும் அந்த பெயரளவிலான வாழ்விற்கு இஸ்லாம் உகந்ததா என்ற சவாலாகும். இஸ்லாத்தின் மதிப்பைக் குறைப்பதற்கு மேற்குலக ஊடகங்கள் இஸ்லாத்தை இடைக்கால தீவிரவாத மதமாக சித்தரிக்-கின்றன. இது ஆணாதிக்க மார்க்கமாகும், ஆண் பெண் சமத்துவம் இல்லை. எனவே இது 21-ஆம் நூற்றாண்டிற்கு உகந்ததல்ல என்று சித்தரிக்கப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக, நமது மார்க்கத்தைப் பற்றி சரியான புரிதல் இல்லாததன் காரணமாக நமது பிள்ளைகளும் இதற்கு இரையாகின்றனர். எனவே மன அமைதிக்காக அவர்கள் தங்களை இந்த மேற்கத்திய கலாச்சாரத்தில் இணைத்துக் கொள்கின்றனர். அது அவர்களை நல்லொழுக்கத்திலிருந்து, ஆன்மிகத்திலிருந்து மற்றும் ஆன்மாவின் வளர்ச்சியிலிருந்து தூர அழைத்துச் செல்கின்றது. இதில் பெற்றோர்களின் பங்கும் இருக்கின்றது. அவர்கள் தங்களது வாழ்வில் busy ஆகி விடுகின்றார்கள். அதனால் அவர்களது குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தை விலையாக கொடுத்து விடுகின்றார்கள்.

முக்கியமான விஷயம் என்னவென்றால் எப்போதுவரை நாம் நேர்மையில், ஒற்றுமையில், இறை பக்தியில் நமது முன்மாதிரியை வெளிப்படுத்த மாட்டோமா நம்மிடம் குணங்கள் வெறுமையாகும்போது வெறும் வார்த்தைகள் குழந்தைகளின் வளர்ப்பில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வராது.

சமீபத்தில் நாம் பார்த்தது என்னவென்றால் நமது இளைய சமுதாயம் மேற்குலக சிந்தனைகளால் மட்டும் பாதிக்கப்படவில்லை. மாறாக பெயர் தாங்கிய முஸ்லிம் உலமாக்களின் அஹ்மதிய்யத்திற்கு எதிரான வாதத்தினாலும் பாதிற்பிற்குள்ளாகியுள்ளனர். அவர்களது மார்க்கத்தைப் பற்றிய சரியான புரிதல் இல்லாததால் அவர்கள் கேட்டது அவர்களுள் ஒரு கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டுதலின் படி நமது இளைஞர்களுக்கு உறுதி அளிப்பதற்கு நமது ஜமாஅத்தின் அறிஞர்கள் இந்த குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளித்தனர். இது மார்க்கத்தில் உறுதியாக இல்லாத குழந்தைகள் மற்றும் இளைஞர் -களிடையே நல்ல ஒரு விளைவைத் தந்தது.

நமது இளைஞர்களின் கவலை மற்றும் அச்சத்தைப் போக்குவதற்காக நாம் மற்றொரு திட்டத்தை எடுத்து வருகின்றோம். அது என்னவென்றால், Open forum-ல் எந்தத் தலைப்பில் வேண்டுமானாலும் அவர்களது சந்தேகங்களுக்குப் பதில் அளிக்கப்படுகின்றது. இது அவர்களுக்கு ஒளிவு மறைவற்ற நேர்மையான தைரியத்தைக் கொடுக்கின்றது.

அடுத்த பெரிய சவால் புதிய தலைமுறையினர், அவர்களுக்கு முழுமையான அறிவு இருப்பதாகவும், எல்லாக் கேள்விகளுக்கும் உடனுக்குடன் Google search-ல் இருந்து பதில் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். எது அவர்களுக்கு புரியவில்லை என்றால் Google-ல் இருக்கும் எல்லாம் நம்பத் தகுந்ததல்ல; உண்மையானதல்ல. அனுபவமற்ற மனதிற்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நீங்கள் அந்த குழந்தைகளிடம் சில விஷயங்களில் விவாதிக்கும் போது அவர்களது வாதத்திற்கு வலு சேர்ப்பதற்காக அவர்கள் உடனடியாக உங்களுக்கு ஒரு Google Search-ஐ பரிந்துரைப்பார்கள்.

நமக்கு தெரியும் Google algorithm-ஐ அடிப்படையாகக் கொண்டு வேலை செய்கின்றது. ஒரு முறை குறிப்பிட்ட அணுகுமுறையை நமது தேடலில் இருந்து எடுத்து விட்டார்கள் என்றால் அதன் அடிப்படையில்தான் அவர்களது பதில் இருக்குமே தவிர, சமமான நிலைப்பாடு இருக்காது. இது உபயோகிப்பாளருக்கு அவரது கேள்விக்கான சரியான பதில் அல்லது கருத்தைத் தரும் வாய்பைக் குறைத்து விடும்.

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளிடம் அணுக வேண்டிய மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் Digital footprint ஆகும். ஒருமுறை இண்டர்நெட்டில் ஏதேனும் பதிவு செய்தால் அது எப்போதும் அங்கே இருக்கும். அந்த பதிவு உங்களது வாழ்வில் பின்னாட்களில் நீங்கள் அதற்கு நேரெதிரான கருத்துகளைக் கொண்டிருந்தாலும் உங்களுக்கு எதிராக உபயோகப்படுத்தப்படலாம். அது என்றும் அழியாத கறையாக இருக்கும்.

மற்றொரு சவால் விளம்பரத்தின் சக்தியாகும். விளம்பரங்களின் மூலமாக பலர் Games, உணவு மற்றும் குளிர்பானங்களின்பால் ஈர்க்கப்படுகின்றனர். அவை பெரும்பாலும் அவர்களது மனம் மற்றும் உடலுக்கு தீங்கானது. இந்த Games-கள் பெரும்பாலும் சண்டைகள், கொலை செய்வது மற்றும் அழிப்பதையே காட்டுகின்றது. இது குழந்தைகள் இடத்தில் எப்படிப்பட்ட உணர்வு மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்றால் அவர்களிடத்தில் இரக்கம், பரிவு மற்றும் புரிதல் இல்லாமல் ஆக்கி விடும்.

மேலும், தற்போதைய ஆய்வுகளின் படி ஊடகத்தில் அதிக நேரம் செலவழிப்பது அவர்களை அடிமையாக்கு -வதுடன் சிறு குழந்தைகளின் மூளையின் நரம்பு அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவாகக் குறுகிய நேரத்திற்கு மட்டுமே கவனம் இருக்கிறது. நாம் நமது வீடுகளில் எங்கு குழந்தைகள் அதிக நேரம் Screen -களுக்கு முன்னால் அமர்ந்திருக்கின்றார்களோ இதைப் பார்க்கின்றோம். இது அரசாங்கங்களுக்கு ஒரு சவாலாகும். சீனா அரசாங்கம் தனது நாட்டின் குழந்தைகளுக்கு எவ்வளவு நேரம் Screen Time இருக்க வேண்டும் என்று வரையறை செய்துள்ளது. BBC-யின் ஒரு கட்டுரையின் படி இங்கிலாந்தில் உள்ள பள்ளிகளுக்கு கொடுக்கப்பட்ட அறிவுரை என்னவென்றால் பள்ளியின் நாட்களில் Mobile phone-ன் உபயோகத்தை தடுக்க வேண்டும் என்பதாகும். இதன் நோக்கம் வகுப்பறையில் தொந்தரவு -களைக் குறைத்து நல்ல நடத்தைகளை ஏற்படுத்துவதாகும்.



நாம் நமது இளைய ஜோடிகள் அதிகமான Mobile உபயோகிப்பதை பார்க்கின்றோம். குறைவான கவனம் மற்றும் பொறுமையின்மை அவர்களது தொடர்பில் மிகப் பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது. எனது கவனத்திற்கு வந்த சமீபத்திய உதாரணம் ஓர் இளம் ஜோடி ஒன்றாக ஒரு அறையில் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் நேரடியாக பேசுவதற்குப் பதிலாக Text message மூலமாக பேசுகின்றனர். இங்கு எழும் கேள்வி என்னவென்றால் அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு என்ன தர்பிய்யத் கொடுக்கப் போகின்றார்கள்? அவர்களே தங்களது பாதையில் இருந்து விலகி சென்றுவிட்டனர்.

இதற்கான தீர்வு என்ன? முதலாவது, பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் பின்பற்றதக்க நல்ல முன்மாதிரிகளாக மாற வேண்டும். இதை அடைய வேண்டும் என்றால் நாம் நமது அடிப்படையான மற்றும் இஸ்லாமிய போதனைகளை நமது வீடுகள் மற்றும் வாழ்வில் பின்பற்றுவதன் மூலமே ஆகும்.

நாம் நல்லொழுக்கத்தை ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாக தொழுவதிலிருந்து ஆரம்பம் செய்வோம். நமது குழந்தைகளின் ஆன்மிக மற்றும் பௌதிக வளர்ச்சிக்காக கணிசமான நேரத்தை அவர்களுக்கு ஒதுக்குவோம். சமூக வலைதளங்களில் குறைவான நேரத்தை செலவிடுவது

அதிகமான நேரத்தை வாசிப்பதில், விளையாடுவதில் குழந்தைகளுடன் அமர்வதில் அவர்களுடனான ஒரு நல்ல பந்தத்தை ஏற்படுத்துவதில் செலவளிப்போம்.

சமூக வலைதளம் அதிகமாக உபயோகிப்பது மற்றும் அதைச் சார்ந்திருப்பதனால் வரும் மற்றொரு முக்கியமான பிரச்சனை என்னவென்றால், குழந்தைகள் மற்றும் பெற்றொர் -களுடனான தொடர்பு குறிப்பாக பெற்றோர்கள் வயதாகும் போது நலிவடைவது ஆகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: உங்கள் இறைவன் நீங்கள் அவனையன்றி வேறெதனையும் வணங்காதீர்கள் என்று கட்டளையிட்டுள்ளான். மேலும் பெற்றோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களில் ஒருவர் அல்லது அவர்கள் இருவரும் உம்முடைய வாழ்நாளில் முதுமையடைந்து விட்டால் நீர் அவர்களை சீ என்று கூட சொல்லாதீர்; ஏசவும் வேண்டாம். அவர்களிடத்து இனிமையாகப் பேசுவீராக. என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது அவர்கள் இருவரும் என்னை வளர்த்தது போல் நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக. (17:25)



இந்த வசனங்கள் தெரிவிப்பது என்னவென்றால், இறைவனின் ஏகத்துவத்திற்குப் பிறகு மனிதர்கள் தங்களது அன்பு, பாசம் பற்றும் பரிவை மற்ற எல்லாரையும் விட முதுமையால் கஷ்டப்படும் பெற்றோர்களுக்கு கண்டிப்பாக கொடுக்க வேண்டும்.

ஆனால் வருந்தந்தக்க உண்மை என்னவென்றால் இன்றைய சமூகம் பெற்றோர்களைப் பாரமாகப் பார்க்கின்றது. இது ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. Independent 2019-ல் வெளியிட்ட அறிக்கையின்படி ஓர் அமெரிக்க மனிதர் தனது பலவீனமான மறதி நோயால் பாதிக்கபட்ட தந்தையை விமானம் மூலமாக லாஸ் ஏஞ்சலஸிலிருந்து யு.கே-விற்கு அழைத்துச் சென்றார். பிறகு அவரது தந்தையை எவரும் அடையாளம் காணாதபடி இங்குள்ள Herefordge நிலையத்தில் விட்டு விட்டார். இது எல்லாம் அவரை கவனிப்பதற்காக செலவிடும் பெருந்தொகையைத் தவிர்ப்பதற்காக செய்யப் -பட்டிருக்கின்றது.

அமெரிக்காவில் இது சர்வசாதாரணமான விஷயமாகி விட்டது. இதற்கு Grammy dumping என்று பெயரும் வைக்கப்பட்டுள்ளது. இந்த தலைப்பு விசித்திரமானதாக இருந்தாலும் தங்களது உறவினர்களால் பார்த்துக் கொள்ள முடியாத அவர்களது செலவுகளை ஏற்க முடியாத காரணத்தால் ஏறத்தாழ ஒரு இலட்சம் முதியவர்கள் ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் கைவிடப்படுகின்றனர்.

நாம் ஒரு பொருளாதார சரிவில் இருக்கின்றோம் என்பதை நான் ஏற்கின்றேன். எப்படியிருப்பினும் இஸ்லாம் நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால், நாம் ஒருபோதும் நம் பெற்றோர்களைக் கைவிடக் கூடாது என்பதாகும். உங்களால் உங்களது பெற்றோர்களுக்குப் பொருளாதார உதவி செய்ய முடியவில்லை என்றால் அவர்களுக்கு உங்களது நேரத்தைச் செலவிடுங்கள். அவர்களுக்காக சமைத்துக் கொடுங்கள். அவர்களுக்கு என்ன உங்களால் கொடுக்க முடியுமோ அதைக் கொடுங்கள். அவர்கள் உங்களைச் சிறு வயதில் கவனித்ததைப் போன்று நீங்கள் அவர்களைக் கவனியுங்கள்.

இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், அல்லாஹ்வே! என்னுடன் சொர்க்கத்தில் துணையாக இருப்பவர் யார்? என்று அல்லாஹ்விடம் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ், அவர்களுக்கு ஓர் இறைச்சிக் கடைக்காரர் உங்களுக்குத் துணையாக இருப்பார் என்று பதிலளித்தான். இதைக் கேட்ட ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அதிர்ச்சியுற்றார்கள். அவர் அந்த இறைச்சிக் கடைக்காரரிடம் என்ன சிறப்பம்சம் இருக்கின்றது என்பதை காண நாடினார்கள். எனவே அல்லாஹ் அவர்களுக்கு கடைவீதியில் இருக்கும் அவரது கடைக்கு வழிகாட்டினான்.

அங்கு சென்று அந்த இளம் கடைக்காரர் தனது வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதைக் கண்டார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அந்த இறைச்சிக் கடைக்காரருடன் அந்த நாள் முழுவதும் கழித்தார்கள். அவர் தனது கடையை மூடி விட்டு சிறிது இறைச்சியை எடுத்து ஒரு பையில் வைத்து விட்டு தனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள், அவருடன் வருவதற்கு அனுமதி கேட்டார்கள். அதற்கு அந்த இறைச்சிக் கடைக்காரரும் சம்மதித்து விட்டார். அவர் தனது வீட்டிற்குள் நுழைந்தார். அங்கு ஒரு வயதான ஊனமுற்ற ஒரு பெண்ணைப் பார்த்தார்கள். அந்த இறைச்சிக் கடைக்காரர் சமையல் அறைக்குச் சென்றார். பிறகு கறியைச் சமைத்தார். கறி சமைத்துக் கொண்டிருக்கும் வேளையில் அந்தப் பெண்ணின் முகத்தைக் கழுவினார். உடையை மாற்றி தலை வாரினார். பிறகு அவர் சமைத்த உணவைக் கொண்டு வந்து அவரது கைகளினால் அந்தப் பெண்ணிற்கு அவள் போதும் என்ற அளவிற்கு ஊட்டினார். பிறகு அந்தப் பெண்ணை அந்த இறைச்சிக் கடைக்காரர் கட்டிலில் படுக்க வைத்தார். அவ்வாறு அவர் செய்த பிறகு அந்தப் பெண்மனி அவரது காதில் ஏதோ கூறினார். அதைக் கேட்ட அந்த மனிதர் புன்னகைத்தார்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அந்த மனிதரிடம் கேட்டார்கள். யார் அந்த பெண்மனி? மேலும் நீங்கள் புன்னகை செய்யுமளவிற்கு அவர் என்ன கூறினார் என்று கேட்டார்கள்? அதற்கு அந்த இறைச்சிக் கடைக்காரர், "அந்த பெண்மனி என்

தாய் ஆவார். எப்பொழுதெல்லாம் நான் அவருக்கு பணிவிடை செய்வேனோ அப்போது அவர் இவ்வாறு கூறுவார். எனதருமை மகனே! நீ என்னோடு செய்த அந்த செயல்கள் அனைத்திற்கும் அல்லாஹ் வெகுமதி அளிப்பானாக. மேலும் உன்னை மூஸா, இம்ரானின் மகனிற்கு சொர்கத்தில் தோழராக ஆக்குவானாக'' என்று பதில் கூறினார்.

நம் அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தாம் ஜனவரி 23, 2004 அன்று கொடுத்த ஜுமுஆ உரையில் விளக்குகின்றார்கள். தன் உறவினர்-களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற இந்த நல்லொழுக்கப் போதனை ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொதுவான-தாகும். அதில் எந்தப் பாகுபாடும் கிடையாது. ஒருவர் தன் குடும்பத்தாருடன் நல்ல முறையில் நடந்து கொண்டால், அந்த இருவரும் ஒருவர் மற்றவரின் உரிமைகளைக் கவனம் செலுத்து-வதினால் கணவன் மனைவியின் அந்த உறவும் மேன்மையடையும். அத்தகைய குடும்பம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறும். மேலும் அந்த வீடும் இவ்வுலகில் சுவர்க்கமாக மாறும்.

நமக்கு நம்மிடையே செலுத்த வேண்டிய கடமை மட்டும் இல்லை. மாறாக நமது பூமிக்கும் செலுத்த வேண்டிய கடமை இருக்கின்றது. பெரும் அளவில் தயாரிக்கப்படும் துணிமணிகள். அது ஒருமுறை பயன்படுத்தப்படுவதாக இருந்தாலும் வேலைப்பாடு-களுடையதாக இருந்தாலும் அது சமூகவலைதளங்களில் மிகுதியாக விளம்பரம்படுத்தப்படுகிறது. எனவே இந்த அதிகப்படியான விஷயம் நமது சுற்றுச் சூழலை பாதிக்கின்றது. தொழிற்சாலைகள் குறைந்த வசதியுடனும் குறைந்த ஊதியத்தில் அதிகமான துணிமணிகளை தயாரிப்பது மட்டுமல்லாமல் நமது இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன. பல விலங்குகள் உலகத்தின் இந்தப் பேராசையினால் அழிந்து போயின.

பல அறிவிப்புகளில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது காலணிகளைத் தாங்களே சரி செய்வார்கள். தங்களது ஆடைகளைத் தாங்களே தைப்பார்கள். மேலும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் மற்றவர்களுக்கு உதவி புரிந்தார்கள். அவர்கள் நமக்கு, எளிமையான செயல்களே இந்த உலகில் நீடித்த நிலையான விளைவை ஏற்படுத்தும் என்று கற்றுத் தந்துள்ளார்கள்.

பல சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் புவி வெப்பமயமாதல் என்னும் விளைவைக் குறைப்பதற்கு பாடுபடுகின்றனர். அதில் நான் சமீபத்தில் கடந்து வந்த இந்தியர் ஒருவரின் சம்பவம் அவரது பெயர் ஜாதவ் பேயங் ஆவார். ஜாதவ் கடந்த 40 வருடமாக ஒவ்வொரு நாளும் ஒரு மரம் நடுகின்றார். இப்போது நியூயார்கில் Central Park-ஐ விடப் பெரிய காட்டை ஏற்படுத்தி விட்டார். இந்தக் காடு நூற்றுக்கணக்கான பல்வேறு விலங்கு-களுக்கு வீடாக இருக்கின்றது. அவரிடம் எப்படி இது நடந்தது என்று கேட்கும்போது நான் எனது இறுதி மூச்சு வரை மரம் நடுவேன் என்று கூறினார். இயற்கை கடவுளாகும். அது எனக்கு ஆர்வத்தைத் தருகின்றது. அது எனக்கு தாக்கத்தைத் தருகின்றது. அது இருந்தால்தான் நான் இருக்க முடியும் என்று கூறினார்.

நான் இங்கு மகிழ்ச்சியுடன் சொல்வது என்னவென்றால் ஜமாஅத் பல்வேறு சுற்றுச்சூழல் திட்டங்களை நடத்துகின்றது. அதில் மரம் நடுதலும் ஒன்றாகும். ஒரு விவசாய நிபுணராக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் சுற்றுச்சூழல் சம்பந்தமான திட்டங்கள் மற்றும் மரம் நடுதலையும் எப்போதும் ஆர்வமூட்டி வந்திருக்கின்றார்கள்.



உலகக் கல்வி நமக்கு நல்ல ஒழுக்கங்களை கற்றுத் தரும்போது மார்க்கக் கல்வியின் நோக்கம் என்ன? இவ்வாறு கூறப்படுகின்றது: நல்லொழுக்கம் எந்த மார்க்கக் கல்வியும் இல்லாமல் வந்து விடும். மேலும் இப்படியும் கூறுகின்றனர்: மார்கத்தைப் பின்பற்றுபவர்களின் நல்லொழுக்கத்தை விட பின்பற்றாதவர்களின் நல்லொழுக்கம் நன்றாக இருக்கின்றது என்று கூறுகின்றனர். குறிப்பாக இந்தக் குற்றச்சாட்டு இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களை நோக்கியே வைக்கப்-படுகின்றது.


ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இதற்கான பதிலை, தாம் ஏப்ரல் 24, 2015 அன்று கொடுத்த ஜுமுஆ குத்பாவில் கூறுகின்றார்கள்: ஒரு மனிதனின் மார்க்கம், நல்லொழுக்கம் மற்றும் அவனது உலகத் தேவைகளை பிரித்துப் பார்ப்பது கஷ்டமான ஒன்றாகும். ஒரு மார்க்கப் பற்றாளரின் நல்லொழுக்கத்தை மார்க்கத்தை விட்டு பிரிக்க முடியாது. மேலும் உலகத் தேவைகளிலிருந்தும் தனது சிந்தனையை அவர் தவிர்க்க முடியாது.

எவர்கள் மார்க்கத்தைப் பின்பற்றுதில்லையோ அவர்களும் மனிதனுக்கு நல்லொழுக்கம் மற்றும் உலகியல் வெற்றி தேவை என கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும், ஓர் உண்மையான முஸ்லிமும் இதைக் கூறுகின்றார். அதாவது இறைவனிடம் மனிதனை அழைத்துச் செல்வதற்கு மார்க்கம் தேவையாகும்.

சில மார்க்க அறிஞர்கள் சுயமாக மார்க்கத்தின் பெயரில் சட்டங்களை ஏற்படுத்தி உள்ளார்கள். இது மேலும் பிரிவை ஏற்படுத்தும். சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் நிலைமைகளுக்கு மார்க்கத்தின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட புனையப்பட்ட சட்டங்களே காரணமாகும்.

(தொடர்ச்சி கடைசி பக்கம்...)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்




## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

*தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.*

4

அடையாளங்கள் இரண்டு வகைப்படும் என்பது இந்த இடத்தில் தெளிவாக வேண்டும். ஒன்று, அச்சுறுத்துகின்ற, தண்டனையைத் தருகின்ற அடையாளங்கள். அவற்றை இறைகோபத்திற்கான அடையாளங்கள் என்றும் கூறலாம்.

இரண்டாவது, நற்செய்திக்குரிய, நிம்மதியை வழங்குகின்ற அடையாளங்கள். அவற்றை நாம் அருளின் அடையாளம் என்ற பெயராலும் குறிப்பிடலாம்.

அச்சுறுத்தும் அடையாளங்கள் கடுமையான கா∴பிர்கள், கோணலான உள்ளம் கொண்டவர்கள், கட்டுப்படாதவர்கள், ஈமான் அற்றவர்கள், ∴பிர்அவ்னின் இயல்பு கொண்டவர்கள் ஆகியோருக்கு வெளிப்படுத்தப்படு -கின்றன. அவர்கள் அஞ்சுவதற்காகவும், இறைவனைப் பற்றிய வல்லமைமிக்க, கண்ணியமிக்க அச்சவுணர்வு அவர்களுடைய உள்ளங்களில் ஏற்படுவதற்காகவும் அவை வெளிப்படுத்தப் -படுகின்றன. மேலும் நற்செய்தியுடைய அடையாளங்கள் உண்மையை வேண்டுபவர்கள், கலப்பற்ற தூய தன்மையுடைய நம்பிக்கை கொண்டவர்கள், உண்மையைத் தேடுபவர்கள் ஆகியோருக்காக வெளிப்படுகின்றன. அவர்கள் மனதின் தன்னடக்கத்தினாலும், தாழ்மையான குணத்தி -னாலும் முழுமையான உறுதித்தன்மையையும், ஈமான் அதிகரிப்பதையும் வேண்டுபவர்களாக இருக்கின்றனர். மேலும் நற்செய்தியைக் கொண்ட அடையாளங்களினால் அச்சமூட்டுவதும், மிரட்டுவதும் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, கட்டுப்படும் அந்த அடியார்களுக்கு ஆறுதல் அளிப்பது. ஈமான் மற்றும் உறுதித்தன்மையின் நிலைமைகளில் முன்னேற்றத்தைக் கொடுப்பது, அவர்களின் கவலைக்குள்ளான நெஞ்சின் மீது பரிவு, ஆறுதல் எனும் கரத்தை வைப்பது ஆகியவை நோக்கமாகும்.

எனவே நம்பிக்கை கொண்டவர் திருக்குர்ஆன் மூலமாக எப்போதும் நற்செய்தியின் அடையாளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். மேலும் ஈமானிலும், உறுதித்தன்மையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார். நற்செய்தியின் அடையாளங் -களினால் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஆறுதல் கிடைக்கின்றது. இயல்பாக மனிதனிடம் காணப்படுகின்ற மன உளைச்சல் நீங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் உள்ளத்தில் அமைதி இறங்குகிறது. நம்பிக்கை கொண்டவர் அல்லாஹ்வின் மறைநூலைப் பின்பற்றுவதன் அருளால் தனது வாழ்வின் இறுதி நாள் வரை நற்செய்திக்கான அடையாளங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். மேலும் அவர் உறுதித்தன்மை -யிலும், இறைஞானத்திலும் எல்லையற்ற முன்னேற்றங்களைப் பெற்றுக் கொண்டிருப்பதற்காகவும், حَقُّ الْيَقِيْنِ (ஹக்குல் யகீன்) வரை சென்றடைவதற்காகவும் மன அமைதியையும், ஆறுதலையும் வழங்கும் அடையாளங்கள் அவர் மீது இறங்கிக் கொண்டிருக்கின்றன.

மேலும் நற்செய்தியைக் கொண்ட அடையாளங்களில் இருக்கும் இன்னோர் இன்பம், அவை இறங்குவதால் நம்பிக்கையாளர் உறுதித்தன்மை, இறைஞானம், ஈமானின் வலிமை ஆகியவற்றில் முன்னேற்றமடைவதைப் போன்றே, நற்செய்திகளைக் கொண்ட அடையாளங்களில் நிரம்பி இருக்கின்ற இறையடையாளங்களையும், இறைவனின் அருட்கொடைகளையும் படைப்பாளனின் வெளிப்படையான, உட்புறமான, கம்பீரமான, மறைமுகமான கருணைகளையும் கண்டு கொண்டதன் காரணத்தால், அவர் அன்பிலும், நேசத்திலும் நாளுக்கு நாள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றார். எனவே உண்மையில் மகத்தானதும், வலிமை மிக்க தாக்கத்தை உருவாக்குகின்றதும், அருளுக்குரியதும், நோக்கத்தை அடைவதும் ஆகிய அடையாளங்கள் நற்செய்தியைக் கொண்ட அடையாளங்களே ஆகும். அவை வலியுல்லாஹ் எனும் அல்லாஹ்வின் நேசர்களுக்கு உச்சகட்ட எல்லைகளாக இருக்கின்ற அந்த முழுமையான இறைஞானம், தனிப்பட்ட அன்பு ஆகியவற்றின் அந்தஸ்து வரை இறை நெருக்கத்தைப் பெற்றவரை கொண்டு சென்று விடுகின்றன.

மேலும் திருக்குர்ஆனில் நற்செய்தியைக் கொண்ட அடையாளங்களைப் பற்றி பல குறிப்புகள் இருக்கின்றன. எதுவரையென்றால், அது அந்த அடையாளங்களை எல்லைக்குட்பட்டவையாக வைக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆனை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் எப்போதும் அந்த அடையாளங்களைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள் என்ற ஒரு நிரந்தரமான வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறது. அது இவ்வாறு கூறுகிறது:

لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ ۗ لَا تَبْدِيْلَ لِكَلِمٰتِ اللّٰهِ ۗ
ذٰلِكَ هُوَالْفَوْزُ الْعَظِيْمُ ۗ

(லஹுமுல் புஷ்ரா ∴பில் ஹயாதித்துன்யா. லா தப்தீல லி கலிமாத்தில்லாஹ். ஸாலிக ஹுவல் ∴பவ்ஸுல் அழீம் - திருக்குர்ஆன் 10:65 காண்க.) அதாவது, நம்பிக்கை கொண்டவர்கள் உலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நற்செய்திக்கான அடையாளங்களைப் பெற்றுக் கொண்டிருப்-பார்கள். அவற்றின் மூலமாக அவர்கள் உலகத்திலும், மறுமையிலும் இறைஞானம் மற்றும் அன்பின் களங்களில் எல்லையற்ற முன்னேற்றங்களைப் பெற்றுக் கொண்டிருப்-பார்கள். இவை இறைவனின் விஷயங்களாகும். இவை ஒருபோதும் நீங்காது. மேலும் நற்செய்திகளைக் கொண்ட அடையாளங்களைப் பெறுவதுதான் மகத்தான வெற்றியாகும். (அதாவது இதுதான் அன்பு மற்றும் ஞானத்தின் உச்ச எல்லை வரை கொண்டு சென்று விடுகிறது).

இப்போது, ஆட்சேபனை செய்பவர் ஆட்சேபனையாக எடுத்து வைத்திருக்கும் இந்த (17:60-ஆவது) வசனத்தில், இறைவன் அச்சுறுத்தும் அடையாளங்களைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளான் என்பதை இப்போது அறிய வேண்டும் அது, وَمَا نُرْسِلُ بِالْاٰيٰتِ اِلَّا تَخْوِيْفًا (வ மாநுர்ஸிலு பில் ஆயாத்தி இல்லா தக்வீ∴பா. - நாம் எச்சரிப்பதற்காகவே அடையாளங்களை அனுப்புகிறோம் என்ற (17:60-ஆவது) வசனத்திலிருந்து தெளிவாகிறது. (அதாவது நாம் அச்சுறுத்தும் அடையாளங்-களை எச்சரிப்பதற்காக மட்டுமே அனுப்புகிறோம் மொழிபெயர்ப்பாளர்). ஏனெனில் இறைவனின் அனைத்து அடையாளங்களையும் அச்சுறுத்தும் அடையாளங்களாக எல்லைக்குட்பட்டவையாகக் கருதி, இந்த வசனத்திற்கு, 'நாம் எல்லா அடையாளங்களையும் அச்சுறுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே அனுப்பிக் கொண்டிருக்கிறோம்; வேறு எந்த நோக்கமும் இருப்பதில்லை' என்று பொருள் கொண்டால், இந்தப் பொருள் மிகத் தெளிவான முறையில் அபத்தமான-தாகும். இப்போது குறிப்பிட்டது போன்று, அடையாளங்கள் இரண்டு நோக்கங்களுக்காக அனுப்பப்படுகின்றன. ஒன்று, அச்சுறுத்துவதற்காக அனுப்பப்படுகின்றன அல்லது நற்செய்திக்காக அனுப்பப்படுகின்றன. இந்த இரண்டு வகைகளைத்தான் திருக்குர்ஆனும், பைபிளும் இடத்திற்கிடம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

எனவே அடையாளங்கள் என்பது இரண்டு வகைப்படும் எனும்போது மேற்குறிப்பிட்ட வசனத்தில் اَلْاٰيَات (அல்ஆயாத் - அடையாளங்கள்) என்ற சொல் (அதன் பொருள், 'அந்த அடையாளங்கள்' என்பதாகும் - நூலாசிரியர்) 'அந்த அடையாளங்கள்' என்பது எந்நிலையிலும் தண்டனைக்குரிய அடையாளங்கள் என்ற இந்த விளக்கத்திலேயே பொருந்தக்கூடியதாக இருக்கும். ஏனெனில் இந்தப் பொருளைக் கொடுக்காவிட்டால், பிறகு இறைவனின் ஆற்றலின் கீழ் உள்ள அனைத்து அடையாளங்களும் அச்சுறுத்தலான வகையைச் சேர்ந்தவையாகவே இருக்கின்றன என்பது கட்டாயமானதாகி விடும். ஆனால் எல்லா அடையாளங்களையும் அச்சுறுத்தல் வகையிலானவையாகவே கருதுவது முற்றிலும் நடைமுறைக்கு எதிரானதாகும். அது அல்லாஹ்வின் நெறிநூலின் அடிப்படையிலும், அறிவின் அடிப்படையிலும், ஒரு தூய மனசாட்சியின் அடிப்படையிலும் சரியானதாக இருக்க முடியாது.

இப்போது அடையாளங்களின் இரண்டு வகையில் மேற்கூறப்பட்ட வசனங்களில் அச்சுறுத்தும் அடையாளங்-களைப் பற்றிய குறிப்பு உள்ளது என்ற விஷயத்திற்கு தெளிவாக தீர்ப்பு கிடைத்து விட்டது. مَا مَنَعَنَآ (மாமன∴னா - எதுவும் நம்மைத் தடுத்ததில்லை. (17:60) அதாவது நாம் அடையாளங்களை அனுப்புவதற்கு, அவற்றை முன்னோர்கள் பொய்ப்படுத்தினார் என்பதைத் தவிர எம்மை




வேறு எதுவும் தடுத்ததில்லை (17:60 காண்க) என்ற வசனத்திற்கு அச்சுறுத்தும் எந்த அடையாளமும் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் வெளிப்படுத்தவில்லை என்று பொருள் எனக் கருத வேண்டுமா? அல்லது அச்சுறுத்தும் அடையாளங்களில் முந்தைய சமுதாயங்களுக்கு காட்டப்பட்டிருந்த அந்த அடையாளங்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்று பொருள் எனக் கருத வேண்டுமா? அல்லது முந்தைய சமுதாயங்கள் பார்த்து பொய் எனக் கருதி விட்டவையும், அவற்றை மு∴ஜிஸாத்துகள் (அற்புதங்கள்) என்று புரிந்து கொள்ளாதவையும் ஆகிய அந்த சிறப்பு வகையான சில அடையாளங்களைத் தவிர இரண்டு வகையான அச்சுறுத்தும் அடையாளங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையின் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற

மூன்றாவது பொருள் நம்பத்தகுந்ததா என்ற இன்னொரு விஷயம் பற்றி ஆய்வு செய்ய வேண்டியது எஞ்சி இருக்கிறது.

விவாதத்திற்குரிய வசனங்களைப் பார்க்கும்போது, முதல் பொருளும், இரண்டாவது பொருளும் எவ்விதத்திலும் சரியானதல்ல என்பது மிக முழுமையான முறையில் தெளிவாகி விடுகிறது என்பது தெளிவாகட்டும். ஏனெனில் நம்மால் அனுப்ப முடிந்த எல்லா வகையானதும், எல்லா விதத்திலானதும் ஆகிய அச்சுறுத்தலான அடையாளங்களை -யும், மறைவிலும் மறைவான தண்டனைக்குரிய அடையாளங் -களையும் அனுப்புவதற்கு நாம் எல்லையற்ற முறையில் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கிறோம். எனினும் அந்த அடையாளங்களை முந்தைய சமுதாயங்கள் பொய்ப்படுத்தின என்பதால் நாம் அவற்றை அனுப்பவில்லை என்று மேற்கூறப்பட்ட வசனங்களைப் புரிந்து கொள்வது முற்றிலும் அபத்தமானதாகும். ஏனெனில் முந்தைய சமுதாயங்கள், தாம் கண்ட அடையாளங்களையே பொய்ப்படுத்தின என்பது வெளிப்படையானதாகும். காரணம், எது பொய்ப்படுத்தப்படு -கிறதோ அதை முதலில் பார்த்திருப்பதும் அவசியமாகும். எந்த அடையாளத்தை இன்னும் பார்க்கவே இல்லையோ அதைப் பொய்ப்படுத்துதல் என்பது எப்படி முடியும்? ஆனால் காணாத அடையாளங்களில் மிகவும் உயர்தரமான அடையாளமும் படைப்பாளனின் வல்லமையின் கீழ் இருக்கின்றன. அதை எந்த மனிதனும் பொய்ப்படுத்த முடியாது. மேலும் எல்லா கழுத்துகளும் அவற்றின் பக்கம் குனிந்திருக்கின்றன.




ஏனெனில் இறைவன் எல்லா வகையான பண்புகளையும் காட்டுவதற்கு ஆற்றல் கொண்டவன் ஆவான். பிறகு படைப்பாளனின் வல்லமைக்கான அடையாளங்கள் வரை -யறைக்கு அப்பாற்பட்டவையும், எல்லையற்ற -வையும் ஆகும். அப்படி இருக்கும்போது எல்லைக்குட்பட்ட காலத்தில் அவையெல்லாம் பார்க்கவும் பட்டன; அவை பொய்ப்படுத்தவும் பட்டன என்று கூறுவது எப்படி சரியானதாக இருக்க முடியும்? எல்லைக்குட்பட்ட நேரத்தில் எல்லைக்கு உட்பட்ட பொருள்கள்தானே பார்க்கப்பட முடியும்? நிராகரிப் -பாளர்கள் எந்த சில அடையாளங்களை முன்னர் கண்டு விட்டனரோ, பொய்ப்படுத்தி விட்டனரோ அவற்றை மீண்டும் அனுப்புவது வீணானவை எனக் கருதப்பட்டது என்பதே எந்நிலையிலும் இந்த வசனத்தின் சரியான பொருளாக இருக்கும். சொல்லமைப்பும் இந்த பொருள்களையே சுட்டிக் காட்டுகிறது. அதாவது, இந்த சம்பவத்தில் இறைவன் சமூது சமுதாயத்தின் ஒட்டகத்தைக் குறிப்பிட்டிருக்கிறான். அது இந்த இடத்தில் சென்ற கால, மறுக்கப்பட்ட, அச்சுறுத்தலான அடையாளங்களைச் சேர்ந்தவையாக இருந்தது பற்றிய குறிப்பு ஆகும் என்பதற்கு ஒரு மிகப் பெரிய சொல்லமைப்பாக இருக்கிறது. மேலும் இந்த மூன்றாவது பொருள்தான் பொருத்தமானதும், சரியானதும் ஆகும்.

(அதாவது முற்காலத்தில் மக்கள் ஏற்கெனவே பார்த்தவையும், பார்த்தும் பொய் எனக் கூறியவையும் ஆகிய அப்படிப்பட்ட அடையாளங்கள் மீண்டும் காட்டப்பட மாட்டாது. புதிய அடையாளங்கள் காட்டப்படும் என்பது 17:60 வசனத்தின் பொருளாகும் - மொழிபெயர்ப்பவர்).

பிறகு இந்த இடத்தில் இன்னொரு விஷயம் நேர்மையாளர்களுக்கு சிந்திக்கத்தக்கதாகும். அதன் மூலம், وَمَامَنَعَنَآ اَنۡ نُّرۡسِلَ بِالۡاٰيٰتِ (வமா மன.்.னா அன்னுர்ஸில பில் ஆயாத்தி - நாம் அடையாளங்களை அனுப்புவதற்கு, அவற்றை முன்னோர்கள் பொய்ப்படுத்தினார் என்பதைத் தவிர எம்மை வேறு எதுவும் தடுத்ததில்லை - 17:60) என்ற வசனத்தில் மு.்.ஜிஸாத்துக்கான (அற்புதத்திற்கான) சான்று தான் காணப்படுகிறதே தவிர மு.்.ஜிஸாத்துகளை (அற்புதங்களை) மறுப்பதற்கான சான்று காணப்படவில்லை என்பது (நேர்மை -யாக சிந்திக்கும்) அவர்களுக்குத் தெளிவாகும். ஏனெனில் (அல்ஆயாத்) اَلۡاٰيٰتُ என்ற சொல்லில் அமைந்திருக்கும் اَلِفۡ لَامۡ (அலி.்.ப், லாம்) என்பவை نَحْوُ (நஹ்வ் என்ற அரபி) இலக்கண விதிமுறையின்படி, இரண்டு நிலைகளைக் கொண்டவையாகவே இருக்கின்றன. ஒன்று, 'எல்லாம்' என்ற பொருளைக் கொடுக்கும். அல்லது 'குறிப்பாக' என்ற பொருளைக் கொடுக்கும். 'எல்லாம்' என்ற பொருளைக் கொடுத்தால், 'நமக்கு எல்லா மு.்.ஜிஸாத்துகளையும் (அற்புதங்களையும்) அனுப்புவதில், மற்றவர்கள் அவற்றைப் பொய்ப்படுத்தினர் என்பதைத் தவிர வேறு எந்த விஷயமும் தடையாக இருக்கவில்லை' என்று பொருள் கொடுக்கப்படும். மற்றும் 'குறிப்பாக' என்ற பொருளைக் கொடுக்கும் என்றால், (நிராகரிப்பாளர்கள் வேண்டுகின்ற) அந்த குறிப்பிட்ட அடையாளங்களை அனுப்புவதில் - மற்றவர்கள் அவற்றைப் பொய்ப்படுத்தினர் என்பதைத் தவிர - நமக்கு வேறு எந்தத் தடையுமில்லை என்று பொருள்படும்.

ஆக, இந்த இரண்டு நிலைகளிலும் (இறை) அடையாளங்கள் வருவது நிரூபண -மாகிறது. ஏனெனில் முந்தைய சமுதாயங்கள் பொய்ப்படுத்தி -யதன் காரணத்தால் நாம் 'எல்லா அடையாளங்களையும்' அனுப்பவில்லை என்ற பொருள் இருக்கும் என்றால், அதிலிருந்து 'சில அடையாளங்களை' அனுப்பியது நிரூபணம் ஆகும். எடுத்துக்காட்டாக, நான் எனது எல்லா செல்வத்தையும் ஸைது என்பவருக்குக் கொடுக்கவில்லை என்று ஒருவர் கூறினால், அவர் தனது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஸைது என்பவருக்குக் கண்டிப்பாகக் கொடுத்திருக்கிறார் என்பது தெளிவாக நிரூபணமாகிறது. நாம் சில குறிப்பிட்ட அடையாளத்தை அனுப்பவில்லை என்ற பொருளைக் கொடுப்போம் என்றால், அப்போதும் மற்ற சில அடையாளங்களை கண்டிப்பாகக் கொடுத்திருக்கிறோம் என்பது நிரூபணமாகிறது.

எந்நிலையிலும், எவர் முதலில் இந்த வசனத்திற்கு முன்னுள்ள, பின்னுள்ள வசனங்களை அவை எப்படி இரண்டு பக்கமிருந்தும் தண்டனையின் அடையாளங்களைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்ப்பாரோ, பின்னர் இன்னொரு பார்வை பார்த்து, அவ்வப்போது இறைவனின் எல்லையற்ற ஆற்றலினால் உருவாகின்றதும், எல்லை -யற்றவையாக இருக்கின்றதுமான அவனது எல்லா

அடையாளங்களையும், அற்புதங்களின் செயல்களையும் சென்ற கால மக்கள் தமது எல்லைக்குட்பட்ட காலத்தில் பொய்ப்படுத்தி விட்டனர் என்ற இந்தப் பொருள் சரியானதும், அனுமானத்திற்கு நெருக்கமானதுமாக இருக்கின்றதா என்ன என்று சிந்தித்தால், பின்னர் மூன்றாவதாக ஒரு நீதிக் கண் கொண்டு பார்வையிட்டு, இந்த இடத்தில் அச்சுறுத்தும் அடையாளங்களைப் பற்றிக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளதா அல்லது நற்செய்தி மற்றும் அருளின் அடையாளங்களைப் பற்றியும் கொஞ்சம் குறிப்பு இருக்கிறதா என்று சிந்தித்தால், பின்னர் நான்காவதாக, اَلْاٰيٰتُ (அல் ஆயாத்) என்பதிலுள்ள اَلِفْ لَامْ (அலி∴ப், லாம்) மீதும் பார்வையிட்டால் அது எந்தப் பொருள்களுக்கான பயனைத் தந்து கொண்டிருக்கிறது என்றும் பார்வையிட்டால், இந்த நான்கு வகையான பார்வைக்குப் பிறகு காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மையை விரும்புவதில் இருந்து வெகு தொலைவில் சென்று விட்டவரைத் தவிர, இந்த இடத்தில், எதிர்மறையைக் கொண்ட لَا (லா - இல்லை) என்ற சொல், அடையாளங்களின் ஒரு குறிப்பிட்ட வகையை மறுப்பதற்காக மட்டும் வந்திருக்கிறது. அதற்கு மற்ற வகையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இன்னும் கூறுவ-தாயின், அதிலிருந்து மற்ற வகைகள் இருக்கின்றன என்பது உண்மைப்படுத்தப்படுவதாக நிருபணமாகிறது என்பதற்கு ஒவ்வொருவரும் தன் உள்ளிருந்து ஒரு சாட்சியை மட்டுமல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான சாட்சிகளைப் பெறுவார்.

இப்போது இவர்கள் வேண்டுகின்ற அச்சுறுத்தும் அடையாளங்கள் அனுப்பப்படாததற்குக் காரணம், முந்தைய சமுதாயங்கள் அவற்றை பொய்ப்படுத்தி விட்டன என்பது மட்டும்தான் என்று இந்த வசனங்களில் மிகவும் தெளிவாக அல்லாஹ் கூறுகின்றான். (17:6 காண்க). எனவே எந்த அடையாளங்கள் முன்னர் மறுக்கப்பட்டனவோ இப்போது அவற்றை மீண்டும் மீண்டும் அனுப்புவது பலவீனத்தின் அடையாளமாகும். அது எல்லையற்ற ஆற்றல்களைக் கொண்டவனின் மகத்துவத்திற்கு அப்பாற்பட்டதாகும். எனவே இந்த வசனங்களில், தண்டனைக்குரிய அடையாளங்கள் கண்டிப்பாக இறங்கும். ஆனால் வேறு வகையில் இறங்கும் என்ற தெளிவான சைகை காணப்படுகிறது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் அதே அடையாளம், ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் அதே அடையாளம், ஹஸ்ரத் லூத் (அலை), ஆது சமுதாயம், ஸமூது சமுதாயம் ஆகியவற்றிக்கு வெளிப்படுத்தப்பட்ட அதே அடையாளம்தான் வெளிப்படுத்தப்-பட வேண்டும் என்ற தேவை என்ன இருக்கிறது? அதன்படி, இந்த வசனங்களுக்கான விளக்கம் மற்ற வசனங்களில் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَاِنْ يَّرَوْا كُلَّ اٰيَةٍ لَّا يُؤْمِنُوْا بِهَا ؕ حَتّٰٓى اِذَا جَآءُوْكَ يُجَادِلُوْنَكَ 1
وَاِذَا جَآءَتْهُمْ اٰيَةٌ قَالُوْا لَنْ نُّؤْمِنَ حَتّٰى نُؤْتٰى مِثْلَ مَآ اُوْتِىَ رُسُلُ اللّٰهِ ؔؕ اَللّٰهُ اَعْلَمُ
حَيْثُ يَجْعَلُ رِسَالَتَهٗ ؕ 2 قُلْ اِنِّىْ عَلٰى بَيِّنَةٍ مِّنْ رَّبِّىْ وَكَذَّبْتُمْ بِهٖ ؕ مَا عِنْدِىْ
مَا تَسْتَعْجِلُوْنَ بِهٖ ؕ اِنِ الْحُكْمُ اِلَّا لِلّٰهِ ؕ يَقُصُّ الْحَقَّ وَهُوَ خَيْرُ الْفٰصِلِيْنَ 3
قَدْ جَآءَكُمْ بَصَآئِرُ مِنْ رَّبِّكُمْ ۚ فَمَنْ اَبْصَرَ فَلِنَفْسِهٖ ۚ وَمَنْ عَمِىَ فَعَلَيْهَا ؕ
وَمَآ اَنَا عَلَيْكُمْ بِحَفِيْظٍ 4 وَيَسْتَعْجِلُوْنَكَ بِالْعَذَابِ ؕ 5 قُلْ هُوَ الْقَادِرُ عَلٰٓى
اَنْ يَّبْعَثَ عَلَيْكُمْ عَذَابًا مِّنْ فَوْقِكُمْ اَوْ مِنْ تَحْتِ اَرْجُلِكُمْ اَوْ يَلْبِسَكُمْ
شِيَعًا وَّيُذِيْقَ بَعْضَكُمْ بَاْسَ بَعْضٍ ؕ 6 وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ سَيُرِيْكُمْ اٰيٰتِهٖ
فَتَعْرِفُوْنَهَا ؕ 7 قُلْ لَّكُمْ مِّيْعَادُ يَوْمٍ لَّا تَسْتَاْخِرُوْنَ عَنْهُ سَاعَةً وَّلَا تَسْتَقْدِمُوْنَ ع 8
يَسْتَنْبِئُوْنَكَ اَحَقٌّ هُوَ ؕ قُلْ اِىْ وَرَبِّىْٓ اِنَّهٗ لَحَقٌّ ؔۚ وَمَآ اَنْتُمْ بِمُعْجِزِيْنَ ع 9
سَنُرِيْهِمْ اٰيٰتِنَا فِى الْاٰفَاقِ وَفِىْٓ اَنْفُسِهِمْ حَتّٰى يَتَبَيَّنَ لَهُمْ اَنَّهُ الْحَقُّ ؕ 10
خُلِقَ الْاِنْسَانُ مِنْ عَجَلٍ ؕ سَاُورِيْكُمْ اٰيٰتِىْ فَلَا تَسْتَعْجِلُوْنِ 11

1. இந்த மக்கள் எல்லா அடையாளங்களையும் பார்த்து ஈமான் கொள்வதில்லை. பிறகு உம்மிடம் வரும்போது அவர்கள் உம்மிடம் சண்டையிடுகின்றனர். (6:26)

2. மேலும் அவர்கள் ஏதாவது அடையாளத்தைக் கண்டால், இறைதூதர்களுக்குக் கிடைக்கின்ற அந்த விஷயங்களை நாங்களே பெறாத வரை நாங்கள் ஒருபோதும் நம்ப மாட்டோம் என்று கூறுகின்றனர். (6:125)

3. நீர் கூறுவீராக: நான் என் இறைவன் புறமிருந்து முழுமையான சான்றைக் கொண்டு வந்திருக்கிறேன். மேலும் நீங்கள் இந்தச் சான்றைப் பார்க்கின்றீர்கள். பின்னர் பொய்ப்படுத்துகிறீர்கள். எதை நீங்கள் சீக்கிரமாக வேண்டுகிறீர்களோ அது (அதாவது இறைதண்டனை) எனது அதிகாரத்திற்குட்பட்டதல்ல. இறுதிக் கட்டளையை இறக்குவது இறைவனின் ஆற்றல் ஆகும். அவனே உண்மையைத் தெளிவாக்கி விடுவான். மேலும் அவனே தீர்ப்பு வழங்குவதில் மிகச் சிறந்தவன் ஆவான். (6:58).

4. இறைவன் எனது தூதுத்துவத்தின் ஒளிமிக்க அடையாளத்தை உங்களுக்கு வழங்கி இருக்கிறான். எவர் அவற்றை அடையாளம் கண்டு கொள்வாரோ அவர் தனக்கே பயனை விளைவித்தார். மேலும் எவர் குருடராகி விட்டாரோ அதன் பாதிப்பும் அவரையே சாரும். நான் உங்களைக் காப்பாற்றுபவன் அல்லன். (6:105)

5. தண்டனை விரைவில் வர அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (29:54)

6. நீர் கூறுவீராக: உங்களுக்கு மேலிருந்தும், உங்கள் கால்களுக்குக் கீழிருந்தும் தண்டனையை அனுப்புவதற்கோ உங்களைப் பல்வேறு பிளவுகளாகப் (பிரித்து) சீர்குலைத்து ஒருவருக்கொருவர் செய்யும் கொடுமைகளை சுவைக்கச் செய்யவோ அவன் ஆற்றல் பெற்றவன் ஆவான். (6:66).

7. நீர் கூறுவீராக: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் உங்களுக்குத் தன் அடையாளங்களை விரைவில் காட்டுவான். நீங்கள் அவற்றை அறிந்து கொள்வீர்கள். (27:94)

8. உங்களுக்கு குறிப்பிட்ட காலம் ஒரு يَوْمٌ (யவ்ம்) நாள் ஆகும்.★ உங்களால் அதிலிருந்து ஒரு நொடி பிந்தி விடவும் முடியாது; ஒரு நொடி முந்தி விடவும் முடியாது. (34:31)

9. இது உண்மைதானா என்று அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். நீர் கூறுவீராக: என் இறைவன் மீது

★ இந்த இடத்தில் يَوْمٌ (யவ்ம் - நாள்) என்பதன் கருத்து, ஆண்டு என்பதாகும். பைபிளிலும் இந்தச் சொல்வழக்கு காணப்படுகிறது. எனவே முழு ஆண்டுக்குப் பிறகு பத்ர் போர் என்னும் தண்டனை மக்கத்தினர்களுக்கு இறங்கியது. அது முதல் போராக இருந்தது -நூலாசிரியர்.

ஆணையாக! நிச்சயமாக இது முற்றிலும் உண்மையே. நீங்கள் இந்த வாக்குறுதிகளிலிருந்து இறைவனைத் தடுக்க முடியாது. (10:54)

10. இந்த நபி உண்மையானவர் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும் வரை, நாம் எம் அடையாளங்களை அடிவானங்களிலும், அவர்களுக்கிடையிலும் விரைவில் காட்டுவோம். (41:54)

11. மனிதனின் இயல்பில் அவசரத்தன்மை இருக்கிறது. நான் உங்களுக்கு விரைவில் எனது அடையாளங்களைக் காட்டுவேன். எனவே நீங்கள் என்னிடம் அவசரப்படாதீர்கள் (21:38)

இப்போது பாருங்கள். இந்த வசனங்களில் கேட்கப்படும் அடையாளங்களைக் காட்டுவது தொடர்பாக எவ்வாறு தெளிவான, உறுதியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன! எதுவரையென்றால், நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளும் அத்தகைய மிகத் தெளிவான அடையாளங்களும் காட்டப்படும் என்று கூட கூறப்பட்டிருக்கிறது. உங்களில் எவராவது இப்படிக் கேட்டால், அதாவது தண்டனை பற்றிய வாக்குறுதிகள் திருக்குர்ஆனில் இடத்திற்கிடம் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும், அவை கண்டிப்பாக ஏதாவதொரு நாளில் காட்டப்படும் என்று திருக்குர்ஆனில் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டோம். அந்த எல்லா வாக்குறுதிகளும் அந்தக் காலத்தில் நிறைவேறவும் செய்தன என்பதையும், இறைவன் தனது வல்லமையைக் காட்டி முஸ்லிம்களின் பலவீனத்தையும், ஆற்றலின்மையையும் நீக்கி விட்டான் என்பதையும், சில பேர்களாக இருந்த அவர்களின் எண்ணிக்கை ஆயிரக் -கணக்கை சென்றடைந்து விட்டது என்பதையும், நிராகரிப்பாளர்கள் மக்காவில் தமது கிளர்ச்சி, அநீதி, அக்கிரமம் ஆகியவற்றின் காலத்தில் மிகவும் ஆணவத்துடன் தண்டனைக்கான அடையாளத்தை அவர்களின் மூலமாக வேண்டிக் கொண்டிருந்தனர் என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டோம். ஆனால் இந்த அடையாளங்களைத் தவிர வேறு அடையாளங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டினார்கள் என்பதற்கான சான்று திருக்குர்ஆனிலிருந்து எங்கு கிடைக்கின்றது என்று கேட்டால், அடையாளங்களைக் காட்டுவது பற்றி திருக்குர்ஆனில் இடத்திற்கிடம் வந்துள்ளது என்பதை தெளிவாக தெரிந்து கொள்ளுங்கள்.

சில இடங்களில் தனது முந்தைய அடையாளங்ளைப் பற்றிய சான்றையும் கொடுத்துள்ளது. كَمَا لَمۡ يُؤۡمِنُوۡا بِهٖۤ اَوَّلَ مَرَّةٍ (கமா லாம் யு.:.மினூ பிஹீ அவ்வல மர்ரத்தின் - அந்த அடையாளத்தை அவர்கள் முன்னரும் நம்பிக்கை கொள்ளாததைப் போன்று - 6:111) என்ற வசனத்தைப் பாருங்கள்.

சில இடங்களில் மறுப்பாளர்களின் அநீதியைக் குறிப்பிட்டவாறு, وَاِنۡ يَّرَوۡا اٰيَةً يُّعۡرِضُوۡا وَيَقُوۡلُوۡا سِحۡرٌ مُّسۡتَمِرٌّ (வயின் யரவ் ஆயதுன்ய் யு.:.ரிழு வயகூலூ சிஹ்ருரம் முஸ்தமிர்) என்று அவர்கள் கூறினர். அதாவது அவர்கள் அடையாளங்களைப் பார்த்து இவர் மாயவித்தைக்காரர் ஆவார் என்ற வகையில் அவர்கள் ஒப்புக் கொண்டது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (54:3 காண்க).

சில இடங்களில் மறுப்பாளர்கள் அடையாளங்களைக் கண்டது பற்றி தெளிவாக ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்ற அவர்களின் அந்த சாட்சிகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, وَشَهِدُوۡۤا اَنَّ الرَّسُوۡلَ حَقٌّ وَّجَآءَهُمُ الۡبَيِّنٰتُ (வஷஹிதூ அன்னர் ரஸூல ஹக்குன்வ் வஜாஅஹுமுல் பைய்யினாத்) என்று கூறுகிறது. அதாவது, இறைதூதர் உண்மையாளர் என்பதற்கு அவர்கள் சாட்சி கூறினர். மேலும் மிகத் தெளிவான அடையாளங்கள் அவர்களை வந்தடைந்தன. (3:87 காண்க).



சில இடங்களில் மு.:.ஜிஸாத்துகளை (அற்புதங்களை) மிகத் தெளிவாக (மறுப்பாளர்களாகிய) அவர்கள் கூறி விட்டனர். எடுத்துக்காட்டாக, சந்திரன் பிளந்த மு.:.ஜிஸா. அது ஒரு மகத்தான மு.:.ஜிஸா (அற்புதம்) ஆகும். மேலும் இறைவனின் வல்லமையின் ஒரு முழுமையான முன்மாதிரி ஆகும். அதை நாம் ‘சுர்மா சஷ்மா ஆர்யா’ என்ற நூலில் நன்றாக விளக்கியிருக்கிறோம். எவர் விளக்கமாக பார்க்க விரும்புகிறாரோ, அவர் அதில் பார்க்க முடியும். எவர்கள் தாமாக உருவாக்கிக் கொண்ட அடையாளங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தனரோ அவர்களில் பெரும்பான்மையினரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடையாளங்களுக்கு இறுதியில் சாட்சியாளர்களாகவும் ஆகி விட்டனர் என்பதையும் இவ்விடத்தில் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இறுதியில் அவர்கள்தானே இஸ்லாத்தைத் தழுவி, இஸ்லாம் மார்க்கத்தை கிழக்கிலும், மேற்கிலும் பரப்பினார்கள்! மேலும் மு.:.ஜிஸாத்துகள் (அற்புதங்கள்), முன்னறிவிப்புகள் பற்றி ஹதீஸ் நூல்களில் தமது கண்கண்ட சாட்சியாக எழுதினார்கள்.

(தொடரும்...)

# துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் - இறையிருப்பிற்கான சிறந்த சான்று

டாக்டர் அஸீஸ் அஹ்மத் ஹஃபீஸ் (Chairman Humanity First)

தமிழாக்கம்: I. முஹம்மது அலி ஜின்னா தல்ஹா

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

ஐந்தாவது சம்பவம்:

West Africa-வில் உள்ள Benin என்ற நகரத்திற்கு செல்வோம். சில வருடங்களுக்கு முன்பு ஜெர்மனியில் உள்ள நமது Humanity First அங்குள்ள நூற்றுக்கணக்கான ஏழை சமுதாயத்துக்காக ஒரு மருத்துவ முகாம் அமைத்தது.

மிகவும் பரபரப்பாக சென்று கொண்டிருந்த முகாமில் ஒரு பெண்மணி தனது சிறு குழந்தையைக் கொண்டு வந்திருந்தார். அவள் கூறினாள்: எனது மகளால் நடக்க முடியவில்லை. இங்கு, அங்குள்ள மருத்துவர்கள்ளிடம் அவளை நடக்க வைக்குமாறு வேண்டினார். ஆனால் அங்கிருந்த மருத்துவர்களால் எந்த சிகிச்சையும் அளிக்க முடியாததாக இருந்தது. அவர்கள் இவ்வாறு கூறினர்: இவள் திரும்ப நடப்பதற்கு மருத்துவம் மூலமாகவோ அல்லது சிகிச்சை மூலமாகவோ எதுவும் செய்ய இயலாது. மாறாக இந்த குழந்தைக்காக நாங்கள் பிரார்த்தனை செய்கின்றோம்.

அந்தக் குழுவின் வழக்கமான செயல்முறைக்கு ஏற்ப அவர்கள் ஒன்று கூடி மனமுருகி இறைவனிடம் வேண்டினார்கள் மேலும் சதக்காவும் கொடுத்தார்கள்.

இந்த குழந்தைக்கு உதவ எங்களிடம் எந்த மருத்துவ வசதியும் இல்லை என்பதை அறிந்து நாங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்தோம் அவன் நடப்பதில் அல்லாஹ்வின் நாட்டம் இருந்தால் அவ்வாறு நடக்க வேண்டினோம். ஆன்மிகம் மற்றும் உடல் நோய்களை குணப்படுத்த அல்லாஹ் தன் தூதரை அனுப்பி உள்ளான் என்பதை நாங்கள் அறிவோம். எனவே அல்லாஹ்வின் விருப்பப்படி ஷி∴பாவை வழங்குமாறு அல்லாஹ்விடம் வேண்டினோம்.

குழுத்தலைவர் டாக்டர் அத்ஹர் சுபேர் சாஹிப் அந்த குழந்தையை தூக்கி மெதுவாக விட்டார்கள். ஆனால் அவள் தரையில் விழுந்து விட்டாள். மீண்டும் அவளை தூக்கி விட்டார்கள். மீண்டும் அவள் தரையில் விழுந்தாள். மறுபடியும் அவளை தூக்கி விட்டார்கள். அவள் தன் எடையை தாங்கிக் கொண்டு நின்றாள். அனைவரும் அல்லாஹ்வின் அற்புதத்தை கண்டு கண்ணீர் மல்க நின்றனர்.

இந்த சம்பவம் இதோடு நிறைவடையவில்லை. இன்னும் இருக்கின்றது. சிறிது நேரம் கழித்து அங்கிருந்த குழுக்களில் இன்னொரு பெற்றோரும் அணுகினர். அவரது குழந்தையும் இதேபோன்று பாதிப்படைந்து இருந்தது. அவரும் இதே போன்று தன் குழந்தையை நடக்க வைக்குமாறு வேண்டினார்.

இது ஏதோ ஒரு வகையில் அவர்கள் கண்ட மாபெரும் அதிசயத்தையும் இறைவனின் கண்ணியத்தையும் சிறுமைப்படுத்துவதாக உணர்ந்த அந்த குழு உறுப்பினர் இது நகைச்சுவை அல்ல என்று பதில் அளித்தார்.




ஆனால் அங்கிருந்த இன்னொரு இளைஞர் இவ்வாறு பதில் அளித்தார். அந்த பதில் அவர்களை திகைப்பில் ஆழ்த்தியது. அவளை நடக்க வைத்த அதே இறைவன் இவனையும் நடக்க வைக்க முடியும் என்றார்.

டாக்டர் ஸுபைர் கூறுகின்றார்: அந்த இளைஞனின் பதில் அவரை வாயடைக்க செய்து விட்டது. சர்வ வல்லமை உடைய இறைவனின் கருணைக்கும் அருளுக்கும் வாயிற் காவலர் ஆவதற்கு நான் யார் என்று இஸ்திக்∴பார் செய்தார்.

எனவே அவர்கள் அனைவரும் மீண்டும் கூடி இந்த குழந்தைக்கும் அல்லாஹ்வின் கருணை வேண்டும் என்று மனப்பூர்வமாக வலியுடனும் வேதனையுடனும் பிரார்த்தனை செய்தனர். இதோ அல்லாஹ்வின் அருளும் கருணையும் அந்த சிறுவன் மீதும் இறங்கியது. அவனும் நடக்கத் தொடங்கினான்.

என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனின் வெளிப்பாடு ஆப்பிரிக்காவில் மட்டுமல்ல உலகெங்கும் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் வெளிப்படுகின்றது.

ஆறாவது சம்பவம்:

காஸாவில் நடந்த போரில் 38 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். எல்லா மரணங்கள், அழிவுகள் மற்றும் வேதனைகளுக்கு மத்தியில் நாம் ஒவ்வொரு நாளும் சர்வ வல்லமை உள்ள உதவிகளை காண்கின்றோம்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணியாளர்கள் தாங்கள் சக காஸாவாசிகளுக்கு அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் சேவை செய்கிறார்கள். அவர்களுடைய உதவி மற்றும் ஒத்தாசைக்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் முழுமையாக திரும்புகிறார்கள்.

போருக்கு முன்னர் இந்த சிறிய குழு பெரிய அளவிலான திட்டங்களை நடத்துவதில் குறைந்த அனுபவத்தைக் கொண்டிருந்தது. அல்லாஹ்வின் அருளால் இந்தக் குழு இப்போது காஸா முழுவதும் பல்லாயிரக்

-கணக்கான மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் எட்டுத்திட்டங்களை நடத்துகின்றது. ஆயிரக்கணக்கான தங்குமிடம் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு கல்வி மற்றும் உளவியல் ஆதரவை வழங்குகின்றது. மேலும் வடக்கு காஸா முழுவதும் உணவு பொட்டலங்களை வழங்குகிறது.

சமீப காலமாக தெற்கு காசாவின் ர.்.பாவில் குண்டு வெடிப்பு தீவிரமடைந்ததை அடுத்து மக்கள் வெளியேறுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதால் சக மனிதனுக்கு சேவை செய்வதற்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த இந்த மனிதநேய ஊழியர்களின் குழுவும் தங்கள் குடும்பத்துடன் வெளியேற வேண்டி இருந்தது.

குறைந்த உடமைகளுடன் வெளியேறி மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் அவர்கள் 50 ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தங்குமிடத்தை உருவாக்கக்கூடிய இடத்தை கண்டுபிடிக்க உதவுமாறு தங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தனர். அல் மவாசி என்று அழைக்கப்படும் வெளியேற்றும் பகுதி ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தஞ்சம் புகுந்துள்ள ஒரு சிறிய தரிசு பிரதேசமாக உலகம் முழுவதும் பலருக்கு தெரியப்பட்டது அறியப்பட்டது.

அவர்கள் தங்கள் தலையை சாய்க்கவாவது ஏதேனும் ஒரு இடம் கிடைக்குமா என்று தேடினார்கள். ஆனால் எங்கும் இல்லை. அவர்களது துஆ அமீருல் மு.்.மினீன் அவர்களின் துஆக்களால் வலுவூட்டப்பட்டன. அன்பிற்குரிய ஹுஃஸுர் அவர்கள் நிலைமையை தினமும் கேட்டு அறிந்தார்கள்.

மறுநாள் அவர்கள் சாத்தியமற்றது சாத்தியமானதை கண்டு அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையால் மட்டுமே அவர்கள் 700 ஸ்கொயர் மீட்டர் உள்ள நிலப்பரப்பை கண்டறிந்தனர். அங்கு அவர்கள் இடைவிடாத குண்டுவெடிப்பில் இருந்து ஓய்வு அளிக்கும் வகையில் தங்கள் குடும்பங்களுக்கு முகாம்களை அமைக்க முடிந்தது.

காஸாவில் உள்ள நமது சகோதர சகோதரிகள் காட்டிய அற்புதமான ஆதரவையும் உறுதி தன்மையையும் நாம் சிந்திக்கும்போது மனித குலம் துன்பங்களை சந்தித்து வெற்றி பெற்ற எண்ணற்ற காலங்களை நாம் நினைவு கூர்கின்றோம்.

### ஏழாவது சம்பவம்:

கடந்த நூற்றாண்டில் முழு உலகமும் பல பயங்கரமான பூகம்பங்களைக் கண்டது. பெரும் துக்கங்கள் மற்றும் மனித வேதனைகள் இருந்த போதிலும் இந்தப் பேரழிவுகள், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தொண்டர்களுக்கு இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்ய தங்கள் நேரத்தையும் முயற்சிகளையும் அர்ப்பணிக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியது.

மேலும் அவ்வாறு செய்வதன் மூலம் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு சொல்ல முடியாத எண்ணற்ற உதாரணங்களைக் கண்டனர்.

பிப்ரவரி 2023 துருக்கி மற்றும் மேற்கு சிரியாவில் 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. Humanity First தன்னார்வ தொண்டர்கள் விரைவில் பேரழிவிற்குள்ளான



சமூகங்களுக்கு சேவை செய்ய தொடங்கினார். ஐ.நா அதிகாரிகளின் அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக Humanity First பேரிடர் குழு இங்கிலாந்தில் இருந்து துருக்கி வழியாக சிரியாவுக்கு புறப்பட்டது.

விரிவான ஏற்பாடுகள் மற்றும் அதிகாரிகளுடனான தொடர்பு இருந்த போதிலும் நாங்கள் எங்கள் பெரும்பாலான நேரத்தை துருக்கியில் பல தடைகளுடன் காத்திருப்பில் கழித்தோம்.

26 பிப்ரவரி 2023 அன்று ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் இடம் துஆவிற்காக கடிதம் எழுதினோம். எல்லாம் வல்ல இறைவனிடம் சிரியா மக்களுக்கு சேவை செய்வதற்கும் வழியில் உள்ள தடைகளை நீக்குவதற்கும் துஆ செய்யுமாறு வேண்டினோம். அதே நாளில் பிப்ரவரி 26-இல் ஹுஃஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் கைகளால் துஆ என்று எழுதப்பட்டு பதில் வந்தது.

இது அனைவரின் ஈமானையும் வலுப்படுத்தியது. ஆனாலும் எங்கள் குழு சிரியாவிற்குள் நுழைய தேர்ந்தெடுக் -கப்படவில்லை என்று WHO அதிகாரிகளால் கூறப்பட்டது. இது மிஷனின் முடிவாகத் தோன்றியது. அதிசயமாக மாறியது. அடுத்த நாள் மாலை சிரியாவிற்குள் செல்லும் அனுமதியைக் கட்டுப்படுத்தும் கவர்னருடன் தொடர்புள்ள மனிதாபிமான அமைப்பின் சில துருக்கிய பெரியவர்களைச் சந்திக்க அழைத்துச் செல்லப்பட்டோம்.

ஏறக்குறைய நள்ளிரவாக இருந்தது. நாங்கள் எங்கள் சான்றிதழ்களை அதிகாரிகளிடம் சமர்ப்பித்தோம். அவர்கள் Humanity First வேலைகளை பார்த்து பிரமிப்பில் இவ்வாறு கூறினார்கள். இன்று இரவு எல்லாம் வல்ல இறைவன் உங்களை எங்களிடம் அனுப்பியது போல் உள்ளது.

நாங்கள் கூட்டத்தை விட்டு வெளியேறி எங்கள் காரில் நுழைந்தபோது ஒரு நபர் வேகமாக வந்து சிரியாவிற்குள் நுழைய கவர்னர் எங்களுக்கு அனுமதி வழங்குவதாகக் கூறி எங்கள் பாஸ்போர்ட்டைக் கேட்டார். எங்களின் கடிதத்தில் ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் அவர்களின் கையால் எழுதப்பட்ட துஆ என்ற வார்த்தைகளை நினைவு கூர்ந்து அல்லாஹ்வின் அருட்கொடையின் நிகழ்வுகளில் நாங்கள் பிரமித்து நின்றோம்.

அல்லாஹ்வின் அருளால் நான்கு குழு சிரியாவிற்குள் வெற்றிகரமாக நுழைந்தது. Humanity First குழு எண்ணற்ற அனாதைகளுக்கு சேவை செய்தது. மருத்துவப் பொருட்களை வழங்கியது. சேதமடைந்த வீடுகளை கட்டி எழுப்பியது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு புதிய ஆரம்பப் பள்ளியையும் கட்டியது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்று தத்துவவாதிகள் கூறுகிறார்கள். ஆனால் நான் ஓர் உயர்ந்த நிலையில் உள்ளேன். இறைவன் இருக்கிறான் என்பதை எனது தனிப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் உறுதிப்படுத்து -கின்றேன்.

அடுத்த சம்பவம் துருக்கி மற்றும் சிரியாவில் கண்ட அல்லாஹ்வின் கருணை அடையாளங்கள் இதுபோன்ற அற்புதங்கள் நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நிகழலாம் என்பதை நினைவில் கொள்ளத் தூண்டுகிறது. சில சமயங்களில் எல்லாம் வல்ல இறைவனின் அற்புதமான பதிலைக் காண்பதற்கு நாம் மிகுந்த வேதனையை தாங்க வேண்டியது வருகின்றது.

2001-ஆம் ஆண்டு எனக்கும் என் மனைவிக்கும் அழகான பெண் குழந்தை பிறந்தது. அது எங்களின் முதல் குழந்தையாகும். பிறந்த ஓரிரு வாரங்களில் அக்குழந்தைக்கு ஒரு அரிய நோயான Severe Combined Immuno Deficieny இருப்பதாக கூறப்பட்டது. இதனை கேட்டதும் எங்கள் உலகம் தலைகீழாக மாறியது.

இங்கிலாந்தின் வடக்கு பகுதியில் உள்ள நியூ கேஸ்டில் வீட்டிலிருந்து 100 மைல் தொலைவில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு விரைந்தோம் அங்குள்ள மருத்துவ பேராசிரியர்கள் எங்களை அமர வைத்து உங்கள் மகள் இன்னும் 48 மணி நேரம் மட்டுமே வாழ்வார் என்றனர்.

எல்லாம் வல்ல இறைவனிடம் அவனுடைய மாட்சிமையின் அடையாளத்தை எங்களுக்காக காட்டவும் அவளுடைய வாழ்க்கையை எதிர்பார்ப்பதற்கு மேலாக வழங்கவும் மன்றாடினோம். மேலும் அன்பிற்குரிய இமாமிடம் பிரார்த்தனைக்காக துஆவிற்காக எழுதினேன். இன்னும் பலருக்கு என்னால் முடிந்தவரை துஆவிற்காக எழுதினேன். அதைத் தொடர்ந்து மாதங்கள் மற்றும் வருடங்கள் கடந்தன. சாத்தியமற்றது சாத்தியமாக ஆனது என்பதை எங்கள் கண்களினால் தினமும் கண்டோம்; காண்கின்றோம். நாங்கள் மட்டுமல்ல மருத்துவர்கள் இதனை கண்டனர். இன்று அல்லாஹ்வின் அருளால் அவளுக்கு 22 வயதாகிறது. அந்த நோயிலிருந்து குணமடைந்து நன்றாக இருக்கிறாள்.

இறுதியாக, ஸினாய் மலையில் மூஸா நபியிடம் பேசிய அந்த இறைவன் இன்றும் பேசுகிறான். இப்ராஹீம் நபியிடம் பேசிய அந்த இறைவன் இன்றும் பேசுகிறான். ஹிரா குகையில் நம் அன்பிற்குரிய நபிக்கு உதவி செய்த அந்த இறைவன் இன்றும் பேசுகிறான் என்பதை நினைவில் கொள்வோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**



துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு மனிதன் தனக்குள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். தீமையிலிருந்து விலக முடியவில்லை என்றால், இறைவனால் விதிக்கப்பட்ட வரம்புகளை மீறினான் என்றால், துஆவில் எந்த விதமான விளைவும் ஏற்படாது.

துஆக்களில் இறைவன் பக்கம் முகம் திருப்பியவாறு கவனம் செலுத்தினால் பிறகு இதில் வழக்கத்திற்கு மாற்றமான தாக்கம் ஏற்படும். ஆனால் இதனை நினைவில் கொள்ள வேண்டும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் இறைவனிடமிருந்துதான் வருகிறது. துஆக்கள் செய்வதற்கும் ஒரு நேரம் இருக்கின்றது. எவ்வாறென்றால் சுபுஹ்வில் ஒரு குறிப்பிட்ட நேரம் உள்ளது. அந்த நேரத்திற்கு ஒரு சிறப்பு இருக்கின்றது. அவை ஏனைய நேரங்களில் இருப்பதில்லை.

இதனைப் போன்றே துஆக்களுக்கு வேறு சில நேரங்களும் இருக்கின்றன. அந்த நேரங்களில் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனிதன் காலை நேரத்தில் புத்துணர்ச்சியுடன் செய்யும் வேலையின் விளைவும் மிகவும் சிறந்ததாக இருக்கும். இன்றைய காலத்தில் இரவு முழுவதும் அல்லது வெகு நேரம் வரை இன்டர்நெட்டில் உட்கார்ந்திருக்கக்கூடிய அல்லது டி.வி.க்கு முன்னால் உட்கார்ந்திருக்கக்கூடிய அல்லது வேறு சில உலகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த மக்களைப் போன்று கிடையாது. காலை வரை அவர்களுக்கு இரவின் தூக்கம் முழுமை அடைந்திருக்காது. காலையில் எழுவார்கள். அரைகுறை உறக்கத்துடன் என்ன தொழுவார்கள்? மற்ற காரியங்களில் அருள் எவ்வாறு உண்டாகும்? ஒவ்வொரு மனிதனும் அவர் உலகவாதியாக இருந்தாலும் சரி, தனது சிறந்த பணிக்காக புத்துணர்வுடன் செயல்படத்தான் முயற்சி செய்வார். ஏனென்றால் இதன் மூலம் முழுமையான கவனத்துடன் வேலை நடைபெற வேண்டும். அந்த வேலையில் நல்ல விளைவுகள் வெளிப்பட வேண்டும் என்பதனால் ஆகும்.

ஜுமுஆ குத்பா 15.03.2013

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை - இறைவன் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில்

**மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி ஸாஹிப் (நாஸிர் ஆலா காதியான்)**

*தமிழாக்கம்: மவ்லவி M. ரஃபீக் அஹ்மத்*

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூலான இஸாலே அவ்ஹாமின் முதலாவது பாகத்தின் 10 மற்றும் 11 –வது பக்கத்தில் இந்த சம்பவத்தையும் இதே சொற்களையும் எழுதி விட்டு அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

அபூதாலிப் பற்றி கூறப்படுகின்ற இந்த எல்லா கருத்துகளும் வரலாறாக நூல்களில் எழுதப் –பட்டுள்ளன. ஆனால் இந்த முழு சொற்றொடரையும் இல்ஹாமாக இறைவன் இந்த எளியவனின் உள்ளத்தில் இறக்கியுள்ளான். ஏதாவது ஒன்று இரண்டு சொற்றொடர்கள் மற்றும் விளக்கிக் கூற வேண்டும் என்பதற்காக இந்த எளியவன் தரப்பிலிருந்து எழுதப்பட்டிருக்கின்றது.

எந்நிலையிலும் குறைஷி குலத்தின் தலைவர்களின் இந்த முயற்சி தோல்வியடைந்ததும் பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது ஸஹாபிகளும் அவர்கள் சுதந்திரமானவர்களாக இருந்தாலும் சரி; அல்லது அடிமைகளாக இருந்தாலும் சரி மக்கத்து காஃபிர்களின் கொடுமைகளுக்கு மேலும் இலக்காகி விட்டனர். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் சில ஸஹாபிகளின் தாங்க முடியாத கஷ்டமான நிலைமைகளை கருத்தில் கொண்டவாறு அவர்களை அபிஸீனியாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்கள். ஆனால் அவர்களோ இந்த கொடுமைகளுக்கு இலக்காகியே வந்தார்கள். எதுவரை என்றால் அநீதி இழைக்கின்ற இவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா மற்றும் ஹஸ்ரத் உமர் போன்ற பெரும் பெரும் மக்கள் முஸ்லிம்களாக ஆகிக் கொண்டிருப்பதையும் பெருமானார் (ஸல்) அவர்களது ஜமாஅத் வளர்ச்சியடைவதையும் பார்த்த பிறகு குறைஷி குலத்தின் தலைவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தவாறு பெருமானார் (ஸல்) மற்றும் பனு ஹாஷிம், பனு முத்தலிப் ஆகிய கோத்திரங்களைச் சார்ந்த அனைவரிடம் இருந்தும் எல்லா வகையான தொடர்புகளையும் துண்டித்து விட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இவ்வாறு முழுமையாக அவர்களை புறக்கணிப்பது தொடர்பான உடன்படிக்கையை தயார் செய்து எல்லா பெரும் பெரும் தலைவர்களிடமும் அந்த உடன்படிக்கையில் கையெழுத்து பெற்று கஅபாவின் சுவரில் அந்த உடன்படிக்கையை பொருத்தினர். இதன் விளைவாக குறைஷியர்களின் இரு பெரும் கோத்திரங்களான பனு ஹாஷிமும், பனு முத்தலிபும் ஒரு மலைக்குன்றை ஒட்டி இருந்த பள்ளத்தாக்கில் முற்றிகையிடப்பட்டனர். இதற்கு அபி தாலிப் பள்ளத்தாக்கு என்று பெயர். மூன்று வருடங்கள் வரை இந்த பள்ளத்தாக்கில் இருந்தவாறு சமுதாயத்தில் இருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்ட நிலையில் அதனால் ஏற்பட்ட கடினமான துன்பங்களை இவர்கள் அனைவரும் சகித்து வந்தனர். இறுதியில் நபித்துவத்தின் பத்தாவது ஆண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட ஒரு ஆன்மீக கனவிற்கேற்ப இந்த உடன்படிக்கையின் எழுத்துகளில் அல்லாஹ் என்ற பெயரைத்தவிர மற்றவற்றை கரையான் அரித்து விட்டதை அவர்களே நேரடியாக கண்டனர். அதற்குப் பிறகு சில நல்ல மக்களின் தூண்டுதலுக்கேற்ப இந்த சமுதாய புறக்கணிப்பின் தொடர் முடிவுக்கு வந்தது. (அஷீரத்துன் நபவிய்யா லி இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 350)

இந்த மூன்று வருடங்களும் சமுதாயத்தின் புறக்கணிப்பையும் துன்பங்களையும் கடந்து அதிலிருந்து வெளியே வந்த பிறகு நபித்துவத்தின் 11–வது ஆண்டில் அவர்களது பெரிய தந்தையான அபூதாலிப் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அதற்கு சில நாட்கள் கழிந்த பிறகு அன்னாரது தூய துணைவியரான ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும் வஃபாத்தாகி விட்டார்கள். அபூதாலிபின் மரணத்திற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இழைக்கப்பட்ட துன்பங்கள் மேலும் அதிகரித்தன. ஆனால் அவர்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை. இறைவன் பக்கம் மக்களை அழைக்க வேண்டும் என்ற கவலை மட்டுமே அவர்களிடம் இருந்தது. எந்த நாளில் எவரும் அவர்கள் கூறுவதை கேட்பதற்கு இல்லாமல் இருந்தார்களோ அந்த நாளே அவர்களுக்கு மிகவும் அதிகமாக சுமையுள்ள நாளாக இருந்தது.

இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு அவர்கள் ஒரு வழிமுறையை கடைபிடித்தார்கள். அதாவது மக்காவிற்கு அருகில் உக்காஸ், சுல்மஜாஸ், மஜன்னா ஆகிய

இடங்களில் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த திருவிழாக்களுக்கு செல்வார்கள். அங்கு எவரை சந்தித்தாலும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை அவர்களுக்கு எட்ட வைப்பார்கள்.

ரபிய்யா பின் இபாத் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுல்மஜாஸில் நடைபெற்ற திருவிழாவில் பார்த்தேன். அவர்கள் மக்களை அல்லாஹ்வின் வழியில் அழைத்தார்கள். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று நீர் கூறினால் நீர் இரட்சிப்பை பெறுவீர். அல்லாஹ் தன்னை வணங்க வேண்டும் என்றும் அவனுக்கு இணையாக வேறு எதனையும் வைக்கக்கூடாது என்றும் உங்களுக்கு கட்டளை இட்டுள்ளான். நான் உங்களுக்காக அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்தார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு பின்னால் அபு லஹபும், அபு ஜஹிலும் கூச்சலிட்டவாறும் மண்ணை வாரி இறைத்தவாறும் பெருமானார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து வந்து கொண்டே இருந்தனர். மக்களை வழிகெடுக்கும் வகையில் இவர் பொய்யர் ஆவார். இவர் கூறும் விஷயத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. உங்களது மார்க்கத்திலிருந்து இந்த நபர் உங்களை வழிதவறச் செய்து விடக்கூடாது என்று அவர்கள் கூறி வந்தனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் பக்கம் மக்களை அழைப்பதற்காக தாயிஃப் நகரத்திற்கு மேற்கொண்ட பயணமும் அங்கு நடைபெற்ற சம்பவமும் நம்மால் மறக்க முடியாதவையாகும். மக்காவிலிருந்து 40 மைல்கள் தொலைவிலுள்ள தாயிஃப் நகரத்தில் தம்மால் விடிவிக்கப்பட்ட அடிமையான ஸைது (ரலி) அவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றார்கள். அங்கு மற்ற தலைவர்களைத் தவிர ஸகீஃப் கோத்திரத்தைச் சார்ந்த மூன்று தலைவர்களும் இருந்தனர். அவர்கள் மூவருமே பெருமானார் (ஸல்) அவர்களின் பாட்டி வழியில் வந்த உறவினர்களாக இருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாம் பற்றி எடுத்துக் கூறி பிரச்சாரம் செய்தார்கள். மக்கத்து குறைஷியர்கள் தம்மை எதிர்த்தது பற்றி எடுத்துக் கூறி அவர்களிடம் உதவிக்காக வேண்டினார்கள். அதைக் கேட்டு விட்டு அந்தத் தலைவர்களில் ஒருவர் உம்மை இறைவன் தூதராக ஆக்கி அனுப்பியுள்ளான் என்றால் அவன் கஅபாவின் திரையை கிழித்துக் கொண்டிருக்கின்றான் என்று கூறினார். இரண்டாவது தலைவர், அல்லாஹ்விற்கு உம்மைத் தவிர எங்களிடம் அனுப்பி வைப்பதற்கு வேறு எந்த தூதரும் கிடைக்கவில்லையா? என்று கேட்டார். மூன்றாவது தலைவர், இறைவன் மீது ஆணையாக! நான் உம்முடன் பேசுவதையே விரும்பவில்லை என்று கூறினார். (இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 419)

அவர் மேலும், இந்த ஊரிலிருந்து உடனடியாக நீங்கள் வெளியேறி விடுங்கள் என்றும் கூறினார். அதோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக, சில அடிமை –களையும் சில குண்டர்களையும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பின்னால் அனுப்பி வைத்தார். அவர்கள் கூச்சலிட்டவாறு அவர்களை ஏச ஆரம்பித்தனர். அப்போது ஒரு பெரிய கூட்டம் அங்கு ஒன்று திரண்டது. அந்த கூட்டத்திலுள்ளவர்கள் வழியின் இரு புறமும் நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கற்களை பொழிய ஆரம்பித்தனர். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்றவாறு கேடயமாகத்



தம்மை ஆக்கிக் கொண்டு கற்களிலிருந்து அன்னாரை காப்பாற்றுவதற்காக முயற்சி செய்தார்கள். ஆனால் தனியாக அவர்களால் மட்டும் எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களை பாதுகாக்க முடியும்?

பெருமானார் (ஸல்) அவர்களின் கால் விரல்களில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. எதுவரை என்றால் அவர்கள் அணிந்திருந்த காலணிகள் இரத்தத்தால் நிரம்பி விட்டன. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்து தலைவர்களான உத்பா மற்றும் ஷிபாவின் திராட்சைகள் உள்ள தோட்டத்தில் அடைக்கலம் புகுந்த பிறகே இந்த கூட்டம் அங்கிருந்து திரும்பிச் சென்றது. சுருக்கமாக கூறுவதென்றால் தாயிஃப் நகரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்த நாட்கள் மிகவும் கடினமான நாட்களாக இருந்தன.

ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், உஹது போர் நடைபெற்ற நாளை விட அதிகமாக கடினமான நாட்கள் உங்களது வாழ்நாளில் வந்திருக்கின்றதா என்று கேட்டார்கள். (உஹது போர்க்களத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின்

பற்கள் ஷஹீதாக்கப்பட்டன. அன்னாரது முகத்திலும் காயம் ஏற்பட்டது). அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! நான் உமது சமுதாயத்தினரிடமிருந்து பெரும் துன்பங்களை சகித்துள்ளேன். ஆனால் எல்லாவற்றையும் விட அதிகமாக கடினமான துன்பத்தை தாயிஃப் நகரத்திற்கு பயணம் மேற்கொண்டபோது நான் தாங்கிக் கொள்ள வேண்டியது வந்தது. அப்போது எனக்கு ஏற்பட்ட கடுமையான துக்கத்தின் காரணமாக நான் தலை குனிந்தவாறு நடந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு



மேகம் என்னை தனது நிழலின் கீழ் எடுத்துக் கொண்டது. அந்த சமயத்தில் மலைகளின் மலக்கு என்னை குரல் கொடுத்து அழைத்தார். எனக்கு ஸலாம் கூறிய பிறகு நான் மலைகளின் மலக்கு ஆவேன். என்னை உங்கள் இறைவன் உங்களிடம் அனுப்பி வைத்துள்ளான். தாங்கள் என்ன கட்டளையிடுவீர்களோ அதை நிறைவேற்றுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

முஹம்மதே! இந்த பள்ளத்தாக்கில் உள்ள இரண்டு மலைகளையும் இவர்கள் மீது விழச்செய்து இவர்கள் நசுக்கப்படுவதை தாங்கள் விரும்புகின்றீர்களா? என்று கேட்டார். அப்போது கருணையின் வடிவமாக திகழ்ந்த பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம். ஒருபோதும் அவ்வாறு செய்து விடாதீர்கள். அல்லாஹ் இவர்களின் சந்ததியிலிருந்து ஏக இறைவனை வணங்கக் கூடியவர்–களையும் அவனுக்கு இணையாக எதையும் வைக்காமல் இருப்பவர்களையும் உருவாக்குவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று கூறினார்கள். (புஹாரி பதவுல் குல்க் அதிகாரம் 7)

பெருமானார் (ஸல்) அவர்களது உள்ளத்தில் இறைவன் பக்கம் மக்களை அழைப்பதில் எந்த அளவு உணர்வு இருந்தது என்பதையும் மக்கத்து காஃபிர்கள் அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாததன் காரணமாக அவர்களுக்கு எந்த அளவு வருத்தமும் துக்கமும் இருந்தது என்பதையும் மறைவான செய்திகளை அறிந்த இறைவனைத் தவிர வேறு எவரும் அறிந்திருக்க முடியாது. அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளத்தின் நிலையை இந்த சொற்களில் படம் படித்துக் காட்டுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான். முஹம்மதே! இவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகவில்லை என்பதற்காக நீர் உமது உயிரையே மாய்த்துக் கொள்வீரா ? (42:4).

பெருமானார் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திற்கு பயணம் செய்த போது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் அவர்கள் சகித்துக் கொண்ட துன்பங்கள் மற்றும் கொடுமைகள் மற்றும் அநீதி இழைத்தவர்களின் சந்ததியிலிருந்து நம்பிக்கை கொள்பவர்கள் உருவாகுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்களுடன் கனிவுடன் அவர்கள் நடந்து கொண்டது ஆகியவற்றிற்கான விளைவுகள் 12 வருடங்களுக்குப் பிறகு நல்ல கனியை அவர்களுக்குத் தந்தது. ஹிஜ்ரி 9–ஆம் ஆண்டில் பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சமயத்தில் தாயிஃப் நகரத்தைச் சார்ந்த ஒரு தலைவர் பிரதிநிதியாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார். அந்த சமுதாயத்திலுள்ள அனைவரது சார்பாகவும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

எந்நிலையிலும் உமக்கு கட்டளையிடப்பட்டதை தெளிவாக எடுத்துக் கூறுவீராக என்ற கட்டளை இறங்கிய பிறகு மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்ந்த அந்த பத்து வருடங்களின் ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலேயே கழிந்தது. ஆனால், மக்காவின் பாறாங்கற்கள் நிரம்பிய மண்ணில் தங்களது இன்னுயிரை அர்ப்பணிக்கின்ற சுதந்திரமான மற்றும் அடிமைகளான நண்பர்கள் அவர்களை ஏற்றுக் கொண்டனர். அதே சமயத்தில் குறைஷி குலத்தின் தலைவர்கள் இறைவனின் இந்த தூதுச் செய்தியை புறக்கணித்ததோடு மட்டுமல்லாமல் பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது அந்த சில சஹாபிகளும் உயிருடன் வாழ முடியாத நிலையை ஏற்படுத்தினர். அவ்வாறிருந்தும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வகையிலும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற கடமையிலிருந்தும் விலகி விடாமல் இருப்பதைக் கண்ட அம்மக்கள் எல்லா கோத்திரத்தைச் சார்ந்தவர்களையும் ஒன்று கூட்டி ஒருமித்த ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். அதாவது ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பிரதிநிதி வர வேண்டும். அவர்கள்அனைவரும் ஒன்று சேர்ந்து பெருமானார் (ஸல்) அவர்களுடைய வீட்டை முற்றுகையிட வேண்டும். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியில் வந்ததும் அவர்களைக் கொலை செய்து விட வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்தனர்.

மறுபுறம் அல்லாஹ் பிற்காலத்தில் மதீனா என்ற பெயரால் புகழ்பெற்று விளங்கிய யஸ்ரப் என்ற மண்ணில் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தங்களது உயிரைக் கூட அர்ப்பணிக்கத் தயாராக இருந்த சில பேரன்பர்களை

உருவாக்கினான். அவர்கள் பைஅத்தே உக்பா ஊலாவிலும் சானியாவிலும் அதாவது உக்பா என்ற இடத்தில் நடைபெற்ற முதலாவது மற்றும் இடண்டாவது பைஅத்தில் கலந்து கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தனர்.

பிறகு அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மக்காவை விட்டு உடனடியாக ஹிஜ்ரத் செய்யுமாறு கட்டளை –யிட்டான். அல்லாஹ்வின் குறிப்பான பாதுகாப்புடனும் அல்லாஹ் வழங்கிய அடைக்கலத்துடனும் தம் சிறந்த தோழரான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் தம் வீட்டை முற்றுகையிட்டவர்களின் கண்களுக்கு முன்னால் நடந்து வந்து மக்காவின் மண்ணிலிருந்து வெளியேறி பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழருடன் மூன்று நாட்கள் வரை சவ்ர் குகையில் அடைக்கலம் புகுந்தார்கள். அதற்குப் பிறகு மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். பிறகு மெது மெதுவாக மக்காவிலிருந்த நபித்தோழர் –களும் கூட ஹிஜ்ரத் செய்து மதீனா வர ஆரம்பித்தார்கள். இவ்வாறு முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரின் ஒரு ஜமாஅத் நிலை –பெற்றது. இதற்குப் பிறகு அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் ஒரு புதிய காலகட்டம் ஆரம்பமானது.



யூதர்களுக்கும் தப்லீக் செய்யப் –பட்டது. கிறித்தவர்களுக்கும் தப்லீக் செய்யப்பட்டது. பொது மக்களுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் தப்லீக் செய்யப் –பட்டது. எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு அருகில் இருந்த பெரும் பெரும் பேரரசுகளின் மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் தப்லீக் கடிதங்கள் எழுதி தம் சிறப்பான தூதுவர்கள் மூலமாக அவற்றை அவர்களுக்கு எட்ட வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். இவ்வாறு ஈரான் மன்னரான கிஸ்ரா, ரோமானிய பேரரசின் மன்னரான கைஸர், அபிசீனியாவின் மன்னரான நஜ்ஜாஷி, எகிப்து நாட்டின் அரசர், கஸ்ஸான் நாட்டின் அரசர் ஆகியோருக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் தப்லீக் கடிதங்களை எழுதினார்கள். இவ்வாறே யமாமா, அமான் மற்றும் பஹ்ரைன் நாட்டுத் தலைவர்களுக்கும் தப்லீக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

சில நற்பாக்கியம் பெற்ற அரசர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை தமது கண்களில் ஒற்றிக் கொண்டனர். அதற்கு கண்ணியம் அளிக்கும் வகையில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். அல்லாஹ்வும் அவர்கள் மீது அருள் புரிந்தான். ஆனால் சிலர் அவற்றுடன் அவமரியாதையுடனும் பரிகாசம் செய்யும் வகையிலும் நடந்து கொண்டனர். கடிதத்தை கிழித்து எறிந்தனர். அப்படிப்பட்ட அரசர்களின் ஆட்சியை அல்லாஹ்வும் துண்டு துண்டாக ஆக்கி விட்டான்.

பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப பத்ர் போரிலிருந்து தற்காப்பு போர்களின் தொடர் ஆரம்பமானது. அந்த போர்களிலும் கூட அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற அம்சமானது எல்லா வகையிலும் மேலோங்கி இருந்ததை நம்மால் பார்க்க முடிகின்றது. கைபர் போரின் போது பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களது கையில் கொடுத்தார்கள். பிறகு அவர்களை நோக்கி இப்போது புறப்படுங்கள். எதிரிகளின் களத்தில் சென்று இறங்குங்கள். பிறகு எல்லாவற்றிற்கும் முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுங்கள். அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் அதை ஒட்டியுள்ள பொறுப்புகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறுங்கள் என்று கூறினார்கள்.

தொடர்ந்து பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உமது தப்லீக்கின் விளைவாக ஒரு மனிதருக்கு நேர்வழியை வழங்கி விட்டால் இந்த நற்பாக்கியமானது சிவப்பு நிறமுள்ள ஒட்டகங்கள் உமக்கு கிடைப்பதை விட மிகவும் சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

தம் வாழ்நாள் முழுவதும் அல்லாஹ் –வின் பக்கம் மக்களை அழைக்கின்ற கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றி பிறகு தம் வாழ்நாளின் இறுதி ஹஜ்ஜின் போது அதாவது இஸ்லாமிய வரலாற்றில் புகழ்பெற்று விளங்கும் ஹஜ்ஜத்துல் விதாவின் போது ஆயிரக்கணக்கான முஸ்லிம்களுக்கு மத்தியில் பெருமானார் (ஸல்) அவர்கள், 'நான் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உங்களுக்கு எட்ட வைத்து விட்டேனா? என்பதற்கு அல்லாஹ்விற்காக நீங்கள் சாட்சி கூறுங்கள்' என்று கேட்டார்கள். அப்போது அனைவரும் ஒருமித்த குரலில் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டீர்கள் என்று நாங்கள் சாட்சி பகர்கின்றோம் என்று கூறினர். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! நீயும் இதற்கு சாட்சியாக இருப்பாயாக என்று கூறினார்கள். (புகாரி கிதாபுல் ஹஜ் அதிகாரம் 131)

(இந்த அனைத்து மேற்கோள்களும் ஹாஃபிஸ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் எழுதிய உஸ்வயே இன்ஸானே காமில் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது.)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நம் நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக இருந்துள்ளார்கள். தொலைந்து போன உண்மைகளை அவர்களே மீண்டும் உலகிற்கு கொண்டு வந்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு இதுவும் ஒரு ஆதாரமாகும். அதாவது அவர்கள் எத்தகைய காலகட்டத்தில் தோன்றினார்கள் என்றால் அந்த காலம் மிக அதிகமாக இருளில் மூழ்கி இருந்தது. இயல்பாகவே ஒரு மகத்தான சீர்திருத்தவாதி தோன்ற வேண்டும் என்ற விருப்பம் இருந்து வந்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உலகை விட்டு எப்போது சென்றார்கள் என்றால் லட்சக்கணக்கான மனிதர்கள் இறைவனுக்கு இணை வைத்தலையும் சிலை வணக்கத்தையும் கைவிட்டு விட்டு ஓரிறைமையையும், நேரிய வழியையும் பின்பற்ற ஆரம்பித்தனர். உண்மையில் இத்தகைய முழுமையான சீர்திருத்தத்தை பெருமானார் (ஸல்) அவர்களால் மட்டுமே செய்ய முடியும்.

அவர்கள் ஒரு காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை நடத்தி வந்தவர்களை, விலங்குகளின் இயல்பை உடைய மனிதர்களை சீர்திருத்தி அவர்களுக்கு மனிதர்களுக்குரிய பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். அல்லது வேறு சொற்களில் இவ்வாறும் கூறலாம். அதாவது அவர்கள் விலங்குகளை மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு மனிதர்களை கல்வி கற்ற மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு கல்வி கற்ற மனிதர்களை இறைவனோடு ஒன்றிவிட்ட மனிதர்களாக மாற்றினார்கள். ஆன்மிக நிலையை அவர்களிடம் ஊதினார்கள். உண்மையான இறைவனிடம் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தினார்கள். அத்தகைய –வர்கள் இறைவனின் வழியில் ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டார்கள். எரும்புகளைப் போன்று கால்களின் கீழ் மிதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் ஈமானை கைவிடவில்லை. ஒவ்வொரு துன்பத்தின் போதும் அவர்கள் முன்னேறிச் சென்றார்கள்.

எனவே எவ்வித சந்தேகமுமின்றி நம் நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால் உண்மையான ஆதமும் அவர்களே ஆவார்கள். அவர்கள் மூலமாகவே மனிதத் தன்மையின் எல்லா சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன. எல்லா நல்ல ஆற்றல்களும் தத்தமது இடத்தில் தமது பணிகளை செய்தன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் பயனளிக்காமல் இருக்கவில்லை. காலத்தால் தாமதமாக வந்தவர்கள் என்பதன் அடிப்படையில் அவர்கள் மூலம் நபித்துவம் முற்றுப் பெறவில்லை. மாறாக, நபித்துவத்தின் எல்லா சிறப்புகளும் அவர்கள் மூலமாக நிறைவை எட்டின.
(லெக்சர் சியால்கோட், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 206–207)

பெருமானார் (ஸல்) அவர்கள் அரபு நாட்டிற்காக மட்டும் தூதராக அனுப்பப்பட்டவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் முழு மனித இனத்திற்கும் தூதராக அனுப்பப் –பட்டுள்ளார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் முஹம்மது (ஸல்) அவர்களே! நீர் கூறுவீராக. மனித இனமே. நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன் (7:159).

நான் ஆரம்பத்தில் ஓதிய அஹ்ஸாப் அதிகாரத்தின் ஒரு வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி இறைவன், ஒளி தரும் சூரியன் என்று கூறுகின்றான். இதிலுள்ள தூதுச் செய்தி என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய வாழ்நாளில் எல்லா மனிதர்களுக்கும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்வது என்பது சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் இந்த ஆன்மிக சூரியன் அஸ்தமித்த பிறகும் கூட அதன் ஒளி ஒருபோதும் முற்றுப்பெற்று விடவில்லை. ஏனென்றால் மீண்டும் ஒரு நிலவு உதித்து அந்த சூரியனின் ஒளியை உலகிற்கு வழங்கி உலகை ஒளிமயமானதாக ஆக்க வேண்டியதிருந்தது. 14–வது இரவில் தோன்றும் அந்த சந்திரன் மூலமாக அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மிகப் புதல்வரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் வெற்றிக்கான பணி ஆரம்பமாக இருக்கின்றது. இதைப் பற்றிய சூரா ஜுமுஆவில் இவர்களைச் சாராத மற்றவர்களுக்கு மத்தியிலும் அவரை எழுப்புவான் என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தம்முடைய நூல்களில் மிகவும் விளக்கமாக இதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் நேர்வழியை முழுமைப்படுத்துகின்ற கடமையானது மிகவும் சிறந்த முறையில் நிறைவேறியது. இப்போது அன்னாரது இரண்டாவது வருகையின்போது அவர்களது ஆன்மிக புதல்வரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நேர்வழியை முழு உலகிலும் பரப்பும் பணி நிறைவு பெற வேண்டியது விதிக்கப்பட்டிருந்தது.

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான நிழலாக தோன்றச் செய்தான். மேலும் அன்னாரை மஸீஹாகவும், மஹ்தியாகவும் ஆக்கினான். அன்னார் இந்திய நாட்டில் தோன்றினார்கள். பிறகு அன்னாரது தூதுச் செய்தியை முழு உலகிலும் எட்ட

வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அல்லாஹ் செய்தான். இன்று உலகம் பல்வேறு ஊடகங்கள் மூலமாக முன்னேறி சென்று கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக ஒரு செய்தி எல்லா இடங்களுக்கும் சென்று சேர்வதற்கான வசதியையும் இறைவன் ஏற்படுத்தித் தந்துள்ளான்.

எனவே ஜமாஅத் சகோதரர்கள் இந்த புதிய கண்டுபிடிப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற இந்த முக்கியமான கடமையை சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும்.

நம்முடைய அன்பிற்குரிய ஹுஸூர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 8 செப்டம்பர் 2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் மீண்டும் ஒரு முறை அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைப் பற்றி கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

நாம் தப்லீக் பணிகளை தொடர்ந்து செய்து வர வேண்டியது அவசியமாகும். வருடத்தில் ஒரு முறை அல்லது இரு முறை அல்லது எப்போதாவது தப்லீக் வாரம் கொண்டாடுவது, தெருக்களில் நின்று கொண்டு பிரசுரங்கள் வழங்குவது ஆகியவற்றால் தப்லீக்கிற்கான உரிமையை நாம் நிறைவேற்றி விட்டோம் என்று மக்கள் புரிந்து கொள்கின்றனர். (நஹ்ல்:126) அல்லாஹ் நுட்பமான ஞானத்துடனும், அழகான போதனைகளுடனும், மறுக்க முடியாத உறுதியான ஆதாரங்களுடனும் தப்லீக் செய்யுமாறு கட்டளையிடுகின்றான். அதற்கேற்ப செயல்படுவது நமது பணியாக இருக்கின்றது. நிரந்தரமான இயல்புடன் இந்த பணியை தொடர்ந்து செய்து வருவது நமது பணியாகும். அதற்கான விளைவுகளை நானே உருவாக்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எவர் வழிகேட்டில் திரிவார். எவர் நேர்வழியைப் பெறுவார் என்பதைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு இருக்கின்றது. நம்மிடம் கேட்கப்படும் கேள்வி இது மட்டுமே ஆகும். நாம் தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைத்து விட்டோமா? என்பதை மட்டுமே அல்லாஹ் நம்மிடம் கேட்பான். அவ்வாறிருக்கும் போது நாம் நமது தப்லீக் செய்யும் கடமையை நிறைவேற்றினோமா? என்பதைப் பற்றி நம்மிடம் கேட்கப்படும்.

அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப நீங்கள் செயல்பட்டீர்களா? இல்லையா? என்றே நம்மிடம் கேட்கப்படும். யார் நேர்வழியைப் பெறுவார்? யாருக்கு நேர்வழி கிடைக்காது? என்பதைப் பற்றிய அறிவு அல்லாஹ்விற்கு மட்டுமே இருக்கின்றது. நாம் நமது கடமையை நிறைவேற்றுபவர்களாக இருந்தால் மரணித்த பிறகு உலகம் குறைந்தபட்சம் அல்லாஹ்விடம் எங்களுக்கு இஸ்லாம் பற்றிய தூதுச் செய்தி கிடைக்கவேயில்லை என்று கூற முடியாமல் போய் விடும்.

தமது குத்பா பேருரையின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த போதனையை கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தை பாதுகாப்பதற்காகவும் அதன் உண்மையை வெளிப்படுத்துவதற்காகவும் எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் உண்மையான முஸ்லிம்களின் முன்மாதிரியை காட்ட வேண்டும். இது முதல் அம்சமாகும். இஸ்லாத்தின் சிறப்புகளையும் அதன் முழுமைத் தன்மையையும் உலகில் பரப்ப வேண்டும். இது இரண்டாவது அம்சமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 323)

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: தப்லீக் செய்வதற்கு உங்களது நிலைமைகளில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசிய –மாகும். ஒரு உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியை காட்டுபவராக ஒரு மனிதன் ஆகும் போது மக்களது கவனம் இதன் பக்கம் திரும்பாமல் இருக்கவே முடியாது. முன்மாதிரியைப் பார்த்து மக்களின் கவனம் நம் பக்கம் திரும்புகின்றது. இதன் மூலம் முறையாக நீங்கள் தப்லீக் செய்வதற்கு முன்னரே தப்லீக்கிற்கான வழிகள் திறக்க ஆரம்பித்து விடுகின்றன. அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் நேர்வழியை முழுமைப்படுத்துகின்ற கடமையானது மிகவும் சிறந்த முறையில் நிறைவேறியது. இப்போது அன்னாரது இரண்டாவது வருகையின்போது அவர்களது ஆன்மிகப் புதல்வரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நேர்வழியை முழு உலகிலும் பரப்பும் பணி நிறைவு பெற வேண்டியது விதிக்கப்பட்டிருந்தது. எனவே அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான நிழலாக தோன்றச் செய்தான். மேலும் அன்னாரை மஸீஹாகவும், மஹ்தியாகவும் ஆக்கினான். அன்னார் இந்திய நாட்டில் தோன்றினார்கள். பிறகு அன்னாரது தூதுச் செய்தியை முழு உலகிலும் எட்ட வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அல்லாஹ் செய்தான். இன்று உலகம் பல்வேறு ஊடகங்கள் மூலமாக முன்னேறி சென்று கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக ஒரு செய்தி எல்லா இடங்களுக்கும் சென்று சேர்வதற்கான வசதியையும் இறைவன் ஏற்படுத்தித் தந்துள்ளான்.

*(9-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இஸ்லாம் நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால் எளிமையான வாழ்வும், படைத்தவனிடம் நமது அர்ப்பணிப்பும் மட்டுமே உண்மையான அமைதியை அடைவதற்கான வழிகளாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: நிராகரிப்பாளர்களுக்கு இவ்வுலகம் அழகு வாய்ந்ததாக காட்டப்பட்டுள்ளது. அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களை எள்ளி நகையாடுகின்றனர். ஆனால் இறையச்சமுடையவர்கள் மறுமை நாளில் அவர்களை விட மேலானவர்களாக இருப்பர். அல்லாஹ் தான் விரும்புபவர்களுக்கு கணக்கின்றி வழங்குகிறான். (2:213)

எனது சொற்பொழிவு முழுவதும் நமது சமூகத்தில் இருக்கின்ற பல எதிர்மறையான தாக்கங்களைக் குறிப்பிட்டிருந்தேன். எவ்வாறிருப்பினும் இந்த எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு இறைவனுடனான ஆழமான தொடர்பு மற்றும் மனிதகுலத்துடன் கருணையுடன் நடந்து கொள்வதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலகட்டம் எப்போது வரும் என்றால் திருக்குர்ஆன் எல்லா ஒளியுடன் இருந்தாலும் அதன் போதனைகள் மக்களின் உள்ளங்களில் இருந்து மறைந்து விடும்.

நாம் மிகவும் நற்பேறு பெற்றவர்களாவோம். நாம் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டுள்ளோம். அருளுக்குரிய கிலா∴பத் அமைப்பு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை 21-ஆம் நூற்றாண்டிலும் எட்ட வைத்துள்ளது. நம் அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஜமாஅத்திற்கு வழிகாட்டுவதற்கும், நமக்கு தேவை ஏற்படும் போது உறுதுணையாக இருப்பதற்கும், சமூகத்தில் இருக்கும் எதிர்மறையான தாக்கத்திலிருந்தும் நம்மை பாதுகாப்பதற்கும் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ளார்கள். அல்லாஹ் நம் கலீ∴பாவிற்கு நல்ல ஆரோக்கியத்தையும் வெற்றியையும் வழங்குவானாக.

நான் எனது உரையை புகழ்பெற்ற அமெரிக்க தத்துவவாதி Will Durant-யின் வார்த்தைகளைக் கொண்டு நிறைவு செய்கின்றேன். நமது காலத்திற்கு முன்னர் ஒரு சமூகம் மார்க்கத்தின் உதவியில்லாமல் நல்லொழுக்கத்தை கடைபிடித்ததாக எந்த ஒரு குறிப்பிடத்தக்க எடுத்தக்காட்டும் இல்லை.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களுக்கு சமூக வலைதளத்தின் எதிர்மறை பயன்பாடுகள் தெரியும் என்றால், பிறகு நீங்கள் அதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். இது உங்களது உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம் ஆகும். ஒருவர் எளிதாக உணர்ச்சி வசப்பட முடியும். அவர் ஒரு லிங்கை ஓபன் செய்தால் அதில் சுவாரசியமான விஷயம் வரும். மேலும் அவர் அதன் மூலம் வேறொரு லிங்கை ஓபன் செய்வார். இவ்வாறு அது சென்று கொண்டே இருக்கும். அந்த நபர் அதன் தீய தாக்கத்தை அந்த நேரத்தில் யோசிக்க மாட்டார். எனவே முதல் முறை நீங்கள் சோஷியல் மீடியாவில் ஒரு விஷயத்தை பார்க்கின்றீர்கள். அது உங்களுக்கு தீய தாக்கத்தை தரும் என்றால் நீங்கள் அதிலிருந்து உடனடியாக தவிர்ந்து விடுங்கள். அது மட்டுமல்லாமல் நீங்கள் எந்த வலைதளம் உங்களது அறிவை மேம்படுத்துமோ அதை நீங்கள் பாருங்கள். உதாரணமாக, அறிவியல் சம்பந்தமான அல்லது கல்வி சம்பந்தமான விஷயங்களைப் பாருங்கள். டாக்குமெண்டரியைப் பாருங்கள். விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்களின் கட்டுரைகளையும் கருத்துகளையும் நீங்கள் பாருங்கள்.

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam